# களத்தில்

அன்பளிப்பு 40P

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 11-02-1994


### ஆறாவது தமிழீழ நீதிமன்றம்

முல்லை மாவட்டத்திலும், தமிழீழ நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு.- பரா தலைமையில் நடைபெற்ற இந்நீதிமன்றத் திறப்பு விழாவில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், முல்லை மாவட்டச் சிறப்புத் தளபதி சாலமன், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஆகியோர் கலந்துகொண்டனர். இது தமிழீழத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆறாவது நீதிமன்றமாகும்.

# தமிழீழத்தவர் அரசற்ற நாட்டினமே!

## சிறீலங்கா ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சுக்களால் உறுதி செய்கின்றனர்

இலங்கைத் தீவில் 1972 இல் சிங்கள பௌத்த பேரினவாதிகள், தமிழீழ மக்கள் மேல் சட்டவிரோதமான முறையில் திணித்த அரசியலமைப்பும், ஆயுத ஆக்கிரமிப்பும் தமிழீழ மக்களை அரசற்ற நாட்டினமாக்கியது. தமிழீழ மக்கள் தமது தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தமக்குள்ள இயல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஆயுத எதிர்ப்பினூடாக தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமையில், தமிழீழ அரசு நோக்கிய அரசை (Defacto Government) அமைத்துக் கொண்ட வரலாற்றுச் செயற்பாடே தமிழீழ விடுதலைப் போராட்டம். தமிழீழ மக்களால் அமைக்கப்பட்டு விட்ட இந்த அரசு நோக்கிய அரசை அழிப்பதற்கும், தமிழீழ எல்லைகளை ஆக்கிரமிப்பதற்கும், தமிழீழ மக்கள் இனத்தை இன அழிப்புச் செய்வதற்கும் சிறீலங்கா அரசாங்கம் தனது பாதுகாப்புப் படைகள் மூலம் ஆயுத ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டது. ஆயினும் தரைவழி, கடல்வழி ஆயுத ஒடுக்குமுறைகள் வெற்றிகரமான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட நிலையில், வான் வெளித் தாக்குதல்கள் மூலம் இன அழிப்பையும் பொருளாதார -போக்குவரத்துத் தடைகள் மூலம் மக்கள் மீதான முற்றுகையையும் சர்வதேச சட்டங்களுக்கு முரணான முறையில் சிறீலங்கா அரசாங்கம் நடாத்தி வருவது இலங்கைத் தீவின் இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

ஆயினும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்குள்ள உறுதியையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தலைமையிலான வழிநடத்தலையும் கள வெற்றிகளையும், எவ்வகையிலும் குலைக்கவோ அழிக்கவோ முடியாது என்பதை உணர்ந்துவிட்ட சிறீலங்கா ஜனாதிபதியும், சிறீலங்கா அரசாங்கமும் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் விஸ்வரூபம் ஒன்றை வெளிக்கொணர்ந்து அதன் துணையுடன் தமிழீழ மண் மீது பாரிய யுத்தமொன்றை தொடுத்து இன அழிப்பின் ஊடாக இராணுவ வெறியாட்டம் மூலம் தமிழீழ மக்களை வெற்றி கொள்வதைத் தனது கொள்கையாக வெளிப்படுத்தி நிற்கிறது.

### 'இனப்பிரச்சினையல்ல என்றவன் நானே'

"நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினை என்று அனைவரும் கூறிக்கொண்டிருந்தனர். இங்கு இருப்பது இனப்பிரச்சினை அல்ல என்று கூறியது நானே" என சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா அநுராதபுரம் இளைஞர் நிவேதன மண்டபத்தில் வைத்துக்கூறி புளகாங்கிதம் அடைந்துள்ளார். இதன் மூலம் இலங்கைத் தமிழர்கள் சிறீலங்கா பௌத்த சிங்கள குடியரசு அமைப்பில் பங்கேற்கவில்லை என்பதை சிறீலங்கா ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். முன்னைய சிறீலங்காப் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா, தமிழர் குறுகிய காலத்திற்கு பிரித்தானியக் காலனித்துவ அரசின் அமுக்கச் சூழ்நிலைகளில், பங்குபற்றிய இலங்கைப் பாராளுமன்றத்தினை அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக மாற்றினால் சிறீலங்காவை தனிச்சிங்களப் பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்த முடியாது என்பதற்காக நவரங்கலா மண்டபத்தில் அரசியலமைப்பு நிர்ணய சபையை அமைத்து அதன் மூலம், குறுகிய காலத்திற்கு தமிழர் பிரித்தானியரால் வகுக்கப்பட்ட பாராளுமன்ற அமைப்பில் பங்குபற்றிய தொடர்ச்சியினையும் கூட அறுத்தெறிந்தார். இதன் மூலம் சட்ட ரீதியாக இலங்கைத் தமிழர் அரசற்ற நாட்டினமாக்கப்பட்டனர். இன்று சிறீலங்கா ஜனாதிபதி அந்த 19-72 சிங்கள பௌத்த குடியரசு அமைப்பின் கீழ் பதவியேற்றவர் என்றவகையில், "இங்கு இருப்பது இனப்பிரச்சினையல்ல" எனக்கூறுவது முற்றிலும் சரியானதே. இலங்கைத் தீவில் இருப்பது இனப்பிரச்சினையல்ல, இலங்கைத் தீவின் மக்கள் இனங்களான சிங்களவர் - தமிழர் இடையிலான தேச முரண்பாடேயுண்டு. இதற்கு ஒரே வழி, இரு மக்கள் இனங்களும்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவுக்கு 17 அரசசார்பற்ற நிறுவனங்கள் மகஜர்

- தமிழர்களின் சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமைக்கான அழைப்பை முன்னெடுங்கள்
- தமிழர்களின் சட்டபூர்வமான அரசியல் அபிலாசைகளை அழிக்கும் சிறீலங்காவை கண்டியுங்கள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்குழுவின் ஐம்பதாவது அமர்வின்போது பதினேழு அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக 'தமிழ் மக்களின் சட்ட பூர்வமான சுயநிர்ணய உரிமைக்கான அழைப்பை முன்னெடுக்கும்படியும், தமிழ் மக்களின் சட்டபூர்வமான அரசியல் அபிலாசைகளை கருவறுக்க முனையும் சிறீலங்கா அரசின் முயற்சிகளை கண்டிக்கும்படி'யும் கோரி ஒரு அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளனர்.

**அக்கூட்டறிக்கையின் விபரம் பின்வருமாறு:-**

இலங்கைத் தீவில் தொடர்கின்ற ஆயுதப் போராட்டமும், மனித உரிமைச் சட்டங்களுக்கு எதிரான முறையில் சிறீலங்கா அரசாங்கம் செய்துவரும் மனித உரிமை வன்முறைகளும் எமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. 1987 பங்குனி மாதத்தில் ஆணைக்குழுவின் தீர்மானம் ஒன்றின் மூலம், சிறீலங்காவில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமை தொடர்பான சட்டங்களை மதித்து நடக்க வேண்டுமென வேண்டப்பட்டது.

ஆறு வருடங்களின் பின் 1993 இல், ஆணைக்குழுவின் 49வது அமர்வில், நிகழ்ச்சி நிரலின் 9 வது பிரிவின் கீழ் "தீவின் வடக்கு -கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழர்கள் 'மக்கள்' எனும் வரைவிலக்கணத்திற்கு ஏற்றவர்கள் எனவும், தங்கள் விருப்புக்கு ஏற்றவகையில் சுதந்திரமான முறையில் தமக்கேற்ற அரசியல் நிலையினை தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டெனவும், இந்த கருத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்படும் தீர்வே, பல வருடங்களாக அநேக மனித உயிர்களுக்கும் மனித வேதனைகளுக்கும் காரணமாக உள்ள பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய தளத்தை உருவாக்குமெனவும்", பதினைந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட்டாக அறிக்கை விடுத்தனர்.

ஆயினும், இன்று ஒரு வருடத்திற்குப் பின்னர் கூட தமிழர் தாயகத்தின் மேல் அமுலாக்கப்பட்ட பொருளாதாரத்தடைகள் தொடர்கின்றன. அத்துடன் தமிழ்ப் பொதுமக்கள் மேல் சிறீலங்கா ஆயுதப்படைகளால் நியாயப்படுத்தப்பட முடியாத விமானக் குண்டு வீச்சுக்களும், கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழர் தாயகத்தின் மேல் நடத்தப்பட்டுவரும் குண்டு வீச்சுக்களுக்கும், சிறீலங்கா அரசாங்கம் வடக்கையும் கிழக்கையும் ஒரே நிர்வாகத்தையுடைய ஒரு அரசியல் அலகாக இணைப்பதற்கு காட்டும் எதிர்ப்புக்கும் இடையே தொடர்புண்டு. இரண்டு வருடங்களுக்கும் மேலாக பாராளுமன்றத் தெரிவுக் குழு பிரச்சினைக்குத் தீர்வு

தொடர்ச்சி 15ம் பக்கம் ....

# எழுபது இராணுவ முகாம்களுக்கு மத்தியில் மட்டக்களப்பில் தேர்தல்

## வவுனியாவில் தமிழ் மக்கள் பங்களிப்பில்லை

சிறீலங்கா அரசாங்கம், ஆயுத முனையில் மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களில் போலியான உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை நடாத்தவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் குடும்பங்களில் தொண்ணூற்றி ஐயாயிரம் குடும்பங்கள் 11-6-1990 முதல் நடைபெற்று வரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களில் எழுபத்தையாயிரம் குடும்பங்கள் இன்றும் அகதிகளாகவே முகாம்களிலும், நண்பர்கள் -உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். சிறீலங்கா இராணுவம் தனது உத்தியோக பூர்வமான அறிக்கையில், தான் 403 வீடுகளையே முகாம்களாக மாற்றியுள்ளதாகவும், இவர்களுக்கான வாடகையைச் செலுத்துவதற்கு இவர்கள் எங்கு இருக்கின்றார்கள் எனத் தெரியாத நிலையில் உள்ளதெனவும் கூறியுள்ளது.

நிலமை இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்னிரண்டு உதவி அரசாங்கப் பிரிவில் எழுபது இராணுவ முகாம்களை அமைத்து மட்டக்களப்பை முற்றுகையிட்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர், தனது கிழக்குப் பிராந்தியத் தளபதி லக்கி அல்கமவை மட்டக்களப்புக்கு நேரடியாக அனுப்பிவைத்துள்ளது. இவர் சிறீலங்கா இராணுவத்தின், இராணுவத் தலைமை அதிகாரியாகவும் சமீபத்தில் பதவி உயர்த்தப்பட்டார். இவரது தலைமையில் நடைபெறவுள்ள மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல், இராணுவ மயமாக்கலின் கீழ் நடைபெறும் சிறீலங்கா அரசாங்கத்தின் ஜனநாயகச் சூழ்ச்சி என கொழும்பு அரசியல் அவதானி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# புதிய சூழ்நிலையின் தேவை

இலங்கைத் தீவில் அமைதி ஏற்பட வேண்டுமாயின் இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சிறீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடவேண்டும் என்பது, உண்மைத் தீர்வை விரும்பும் அனைவரினதும் கருத்து. இதற்கு மகாவம்ச புராணக்கதைகள் மறக்கப்பட்ட, புதிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். உண்மையில் தமிழர் பிரச்சினை (Tamil Question) என்றால், அது தமிழீழ மக்களின் அமைதிக்கான தேடலே. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல், இலங்கைத் தீவின் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகமாக விளங்கியது என்பது வரலாறு. தமிழ் அரசுக்கள் காணப்பட்டன என்பது வரலாற்று உண்மை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற காலனித்துவ ஆட்சியாளர்கள் கூட, தமிழ் அரசுக்களின் எல்லைகளையும் இறைமையையும் சிங்கள அரசுக்களின் எல்லைகளிலும் இறைமையிலும் இருந்து வேறுபடுத்தி, அதற்கான நிர்வாக முறைகளையே கையாண்டனர் என்பது கண்கூடு.

ஆயினும் 1833 இல் பிரித்தானிய காலனித்துவவாதிகள் கோல்புறூக் கமரோன் சீர்திருத்தத்தின் மூலம், இலங்கை என்ற ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் -சிங்கள நாட்டினங்களையும், அவற்றின் அரசுக்களையும் ஒருங்கிணைத்தனர். இருந்தபோதிலும் 1879 இல் பிரித்தானிய காலனித்துவச் செயலாளர் கியூச் கிளைகோன் (Sir Huge Cleghon), "இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு பிரதேசங்களை மலபார் (தமிழர்கள்) மக்களும், வளவை கங்கை முதல் சிலாபம் வரையிலான தெற்கு மேற்கு பிரதேசங்களின் உட்பகுதிகளில் சிங்கள மக்களும் என இரு வேறுபட்ட நாட்டினத்தவர்கள், பண்டைக்காலம் முதல் இத்தீவை தமக்குள் பிரித்து வைத்திருக்கின்றனர். இவர்கள் இருவரும் தமது மொழி, மத, நடத்தைப் போக்குகளில் முற்றிலும் வேறுபட்ட நாட்டினத்தவராகக் காணப்படுகின்றனர்" என தனது அறிக்கையில் எழுதியுள்ளார். இதன்படி பிரித்தானிய அரசாங்கம் இலங்கைத் தீவில் இரு நாட்டினங்கள் இருக்கின்றன என்பதை ஏற்ற நிலையில் தான் இலங்கைத் தீவில் தமது நிர்வாக வசதிக்காக ஒற்றையாட்சி அமைப்பை ஏற்படுத்தினர். ஆயினும் 1931 இல் டொனமூர் சீர் திருத்தம் கொண்டுவரப்படும் வரை இலங்கையில் நாட்டினங்கள் தமது இறைமையை பிரதிநிதித்துவத்தினூடாக வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால், 1931 முதல் 1948 வரை அரசியலமைப்புத் திருத்தங்களினூடாக இலங்கைத் தீவு சுதந்திரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த காலம். இக்காலகட்டத்தில் எல்லாம் தமிழ் மக்கள் தமது இறைமைக்கு ஏற்பட்ட சவால்களையும், தாம் சொந்த மண்ணிலேயே இரண்டாந்தர பிரஜைகளாக மாறக்கூடிய அபாயத்தையும், பிரித்தானியருக்கு மகஜர்களினூடாக எடுத்தியம்பி வந்தனர். இருப்பினும் பிரித்தானியர் 1948 இல் ஒற்றையாட்சியின் கீழ் தமது விருப்பின் பேரில் சுதந்திரம் கொடுத்தனர். சுதந்திரம் பெற முன்பு டி. எஸ் . சேனநாயக்கா, இலங்கைத் தீவில் இருந்து அந்நியரை வெளியேற்ற உதவும்படியும், தான் இலங்கைத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏற்ற தீர்வை முன்வைப்பதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார். இதை சுதந்திரத்துக்கான முன்நிபந்தனையாக ஏற்ற நிலையிலேயே, தமிழர்கள் பிரித்தானியர் அளித்த பாராளுமன்ற ஜனநாயகத்தில் பங்குபற்றினர். ஆயினும் 1954 ஆம் ஆண்டு இந்தியத் தமிழர் பிரஜா உரிமைச் சட்டம், 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் போன்றவை பிரதிநிதித்துவ விகிதாசாரம் தொழில் உரிமை போன்ற அடிப்படை மனித உரிமைகளைப் பாதித்து சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு சட்ட ரீதியான அந்தஸ்த்தை அளித்தது. 1960 ஆம் ஆண்டு சத்தியாகிரகத் தோல்வி, 1958, 1965 ஆம் ஆண்டு பேச்சு வார்த்தைகளின் தோல்வி என்பன ஜனநாயக அகிம்சைவழி எதிர்ப்புக்களின் இயலாமையை உணர்த்தியதுமல்லாமல் சிங்கள பௌத்த பேரினவாதம் சட்ட ரீதியாக ஆயுத பலம்பெற உதவியது. இந்த ஆயுத பலம் ஆரம்பத்தில் பொலிசாரை இராணுவத்தின் இடத்தில் பயன்படுத்தும் உத்தியாகவே வெளிப்பட்டது. இதன் அடிப்படையிலேயே 1972 இல் சிங்கள பௌத்த பேரினவாத குடியரசு அரசியலமைப்பு இலங்கைத் தமிழர் மேல் திணிக்கப்பட்டது. ஆயினும் இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய மற்றொரு சட்ட நிலைப்பாடு உண்டு. அதுவரை தொடர்ந்து வந்த தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ பங்களிப்பையும் துண்டிக்க வேண்டுமென்னும் நோக்கிலேயே, இலங்கைப் பாராளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றாது நவரங்கலாவில் புதிய அரசிலமைப்புச் சபையை சிங்கள பௌத்த பேரினவாதிகள் அமைத்து, அதன் மூலம் சிங்கள பௌத்த குடியரசை பிரகடனப்படுத்தினர்.

எனவே 1972 முதல் அதுவரை இருந்து வந்த காலனித்துவ தொடர்நிலைத் தொடர்பும் துண்டிக்கப்பட்ட நிலையில், இலங்கைத் தமிழர்கள் அரசற்ற நாட்டினம் ஆயினர். இந்த அரசற்ற நாட்டினத்தை இன அழிப்பு, இராணுவ அடக்குமுறை, தமிழர் தாயக பூமியின் குடிசன அடர்த்தி -அமைப்பு -எல்லைகள் என்பவற்றைச் சிதைத்தல் பொருளாதார -தொழில் -கல்வி முயற்சிகளை அழிப்பதனூடாகத் தமிழர் வாழ்வை முடமாக்கல் என்பவற்றினூடாக சிறீலங்கா பௌத்த பேரினவாத அரசு இல்லாதொழிக்க முயன்று வருகின்றது. இதுவே இந்த அரசற்ற நாட்டினம் தனது வாழ்வின் தேவையாக ஆயுதப் போராட்டத்தை தேர்ந்தெடுக்க வைத்தது. அதனை தலைமை தாங்கி நெறிப்படுத்தி வழிப்படுத்தும் தலைமை அமைப்பாக -தமிழர்களின் அரசியல் -இராணுவ சக்தியாக தமிழரின் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பானவர்களாக -விடுவிக்கப்பட்ட தமிழீழப் பிரதேசத்தின் அரசு நோக்கிய அரசாக -மிகுதி பிரதேசத்தை விடுவிக்கவேண்டிய கடமை உள்ளவர்களாக விடுதலைப் புலிகள் விளங்குகின்றனர். இந்த் அரசியல் யதார்த்தத்தின் அகக் காரணியை உணருவது -உணர்த்துவது தான் புதிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு முதலாவது அடிப்படை. இது உணரப்பட்டால் மட்டுமே சிங்களவரை தமிழரும், தமிழரைச் சிங்களவரும் புரிந்து கொள்ள முடியும். அடுத்து சிறீலங்கா செய்துவரும் பொருளாதார ஒடுக்குமுறை -தடைகள் -இன அழிப்பு குண்டு வீச்சுக்கள் -மக்களை முற்றுகையிடும் போக்குவரத்துத் தடைகள் போன்ற புறக்காரணிகளை அகற்றுதல் இரண்டாவது தேவை. அத்துடன் பேச்சுவார்த்தை எந்தவித நிபந்தனையும் இன்றி நடைபெற வேண்டியது மிக அவசியம். இந்த அடித்தளங்கள் உருவாகினால் மட்டுமே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய சூழ்நிலையில் பேச்சு வார்த்தை வளரும். ■

# அகதிகள் நிலைப்பாட்டில் சொல்லொன்று...செயலொன்றா?

மனித உரிமைகள், மனிதநேயம் என்பவை தொடர்பாக மேற்குலக நாடுகளின் சொல்லொன்று செயல் ஒன்றாக உள்ளது. இவை அரசியல் உள்நோக்கமும், இலாப நோக்கும் கொண்டவை. இதற்கு பொஸ்னியாவில் இருந்து சிறீலங்கா வரையிலும் பல உதாரணங்கள் பரவிக் கிடக்கின்றன.

இந்த வகையிலேயே சுவிட்சர்லாந்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதையும் குறிப்பிடலாம். ஏனெனில், சுவிட்சர்லாந்தின் இம் முடிவானது, அந்நாடு மனித உரிமைகள், மனிதநேயம் என்பனவற்றிற்கு அப்பால், தமது லாபம் ஒன்றையே நோக்காகக் கொண்டுள்ளது.

## மனித உரிமை வன்முறைக்கு ஆதாரங்கள்

உலகில் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் முன்னணி நாடுகளில் சிறீலங்கா அரசும் ஒன்று. இது குறித்து இன்று எவரும் சந்தேகம்கொள்ள வேண்டிய தேவையே இல்லை. இதற்குச் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள், மனித நேய அமைப்புக்கள் எனப் பல ஆதாரமாக உள்ளன.

அதற்கும் மேலாக மண்டைதீவுக் கிணறுகளில் இருந்து தோண்டப்பட்ட மனித எலும்புக் கூடுகளில் இருந்து, சூரியகந்த மலைப் பகுதியில் தோண்டப்பட்ட / தோண்டப்படவுள்ள மனித எலும்புக் கூடுகள் வரை ஆதாரமாக உள்ளன. இதற்கும் மேலாக, வடக்கு -கிழக்கில் இன்று உள்ள இராணுவ முகாம்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்பனவற்றைத் தோண்டினால் இன்னும் பெருமளவு ஆதாரங்கள் கிடைக்கும்.

## நிராயுதபாணியான அப்பாவி மனிதர்கள்

அத்தோடு, இலங்கையில் அரச படையினரால் கொல்லப்பட்டவர்கள், கொல்லப்படுபவர்கள் ஆயுததாரிகளோ, அன்றி தீவிரவாதிகளோ அல்ல. பச்சிளம் பாலகர்களில் இருந்து தள்ளாடும் வயோதிபர்கள் வரை ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றிக் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு ஆதாரம் இல்லை என யாராவது கூற முற்படுவார்களானால் அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்றே கொள்ள முடியும். அவர்கள் எந்த உண்மையையும் கண்டுகொள்ளக் கூடியவர்கள் அல்ல.

## அரசியல் தஞ்சத்திற்கு அருகதை உடையோரே

இந்நிலையில், இலங்கையில் இருந்து வெளியேறியவர்களை அரசியல் தஞ்சம் கோருவதற்கு அருகதை அற்றவர்கள் என எவ்வாறு கருத முடியும்? இவர்கள் தாய் மண்ணைவிட்டு வெளியேறியது சரியா? கடந்த காலத்தில் அவர்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடாதவர்கள் என்பவை ஒருபுறம் இருப்பினும், சிறீலங்கா அரசின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு அஞ்சி வெளியேறுபவர்களுக்கு புகலிடம் மறுக்கப்படுவது எப்படி நியாயமாகும்? சொத்தும், குடும்பமும் அழிக்கப்பட்டால்தான் அரசியல் தஞ்சம் என்பது எத்துணை நியாயமானது? உலகில் இன்று இலங்கைத் தமிழர் என்பதே அகதி அந்தஸ்து பெறப் போதுமானது.

இதேவேளை திருப்பி அனுப்பப்படும் அகதிகளை தென்னிலங்கையில் வைத்துப் பாதுகாப்பதும், பராமரிப்பதென்பதும் வேடிக்கையானதும், சிங்களப் பேரினவாத அரசின் இனஅழிப்பு / ஒடுக்கல் நடவடிக்கைகளுக்குத் துணை போவதுமான விடயமும் ஆகும். சிங்கள ஆட்சியாளர்கள் இன்று மேற்கொள்ளும் அரசியல் வன்முறையில் சிங்கள இளைஞர்களே நாட்டைவிட்டு ஓடும் நிலையில், தமிழரை சிங்கள அரசிடம் பணயம் வைப்பதென்பது ஓநாயின் வாயில் ஆட்டைக் கொடுத்ததிற்கு ஒப்பானதாகும்.

## மனிதநேயத்திற்கு எதிரானது

மேலும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பில் நாடு திரும்புபவர்களை விடுவதென்பது கடந்த கால சம்பவங்கள் எதையும் கருத்திற் கொள்ளாத ஒரு நடவடிக்கை ஆகும். இதே போன்றே இந்தியாவும் கூறிக் கொண்டு அகதிகளைத் திருப்பி அனுப்பியது. ஆனால், அவர்களில் பலர் இராணுவத்தாலும், தேசவிரோத சக்திகளாலும் கைது செய்யப்பட்டனர்; துன்புறுத்தப்பட்டனர். ஆனால் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கியோரால் எதையும் செய்ய முடியவில்லை. இந்நிலையில், சுவிட்சர்லாந்து அரசாங்கமோ அன்றி மேற்குலகமோ அகதிகளைத் திருப்பி அனுப்ப மேற்கொள்ளும் முடிவானது, அவர்களால் பெரிதாகப் பிரச்சாரம் செய்யப்படும் மனித உரிமை, மனிதநேயம் என்பவற்றிற்கு முற்றிலும் விரோதமானது. அதேவேளை, சிங்களப் பேரினவாதத்தின் இனவாதப் போக்குக்கு மறைமுகமாக ஊக்கமும், ஒத்துழைப்பும் கொடுப்பதும் ஆகும். இதன்பின் மனித உரிமை, மனிதநேயம் என்பன பற்றி அவை பேசுவதில் அர்த்தமில்லை.

## தாயகமே என்றும் துணை

இதேவேளை ஒருவருக்கு தமது தாயகத்தைத் தவிர, வெளிநாட்டு அகதி வாழ்க்கையில் பாதுகாப்பும், சுதந்திரமும் கிட்டாது என்பதற்கு இது நல்லதொரு படிப்பினையும் ஆகும். ■

# உடவளவ காட்டுப்பகுதியில் மற்றுமொரு மனித புதைகுழி

## ■ மண்டை ஓடுகள் மீட்பு

சிறீலங்காவின் தேசிய வனபரிபாலனத்திற்கு உட்பட்ட உடவளவ பகுதியில் மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மனித மண்டை ஓடுகள், எலும்புகள் மற்றும் பாவனைப் பொருட்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன. இப் புதைகுழியில் 40 பேர் புதைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உடவளவ தேசிய வன பாதுகாப்புப் பகுதியில் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, எம்பிலிப்பிட்டிய நீதிபதி பி. ரணசிங்கா ஆகியோர் முன்னிலையில் இப்புதைகுழி தோண்டப்பட்டது. அப்பொழுதே இவ்வாறு மண்டையோடு மனித எலும்புக்கூடுகள் என்பனவும் பாவனைப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

உடவளவப் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்றுடன் வேறு இரு வாகனங்களில் மனித சடலங்கள் கொண்டு வரப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதை தான் கண்டதாக கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

தனது உயிருக்கு அஞ்சியே தான் இதுவரை காலமும் தகவல் தெரிவிக்கவில்லை எனவும், இப்பொழுதும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தனக்குப் பாதுகாப்புத் தருமாறும் அக்கிராமவாசி எம்பிலிப்பிட்டிய நீதிபதியைக் கோரியுள்ளார்.

அண்மையில் சூரியகந்த மலைப் பகுதியில் மனித புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இப் புதை குழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் தென்னிலங்கையில் ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தில் அரச படைகளினால் கொன்று புதைக்கப்பட்ட பலரின் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ■

# கடற்படைக்குப் பயந்து கடலில் குதித்தவர் மரணம்

சிறீலங்காக் கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக கடலில் குதித்த மீனவர் கடற்சுழியில் அகப்பட்டுப் பலியானார்.

இச்சம்பவம் அண்மையில் பூநகரி -கல்முனை, சின்னவேலிப் பகுதிக் கடலில் நடைபெற்றது. அவருடன் சென்ற ஏனைய மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனர். குருநகர், றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த யோசப் அன்ரனி பிரான்சிஸ் (வயது 52) என்பவரே இவ்வாறு பலியானவராவர். ■

# பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் கூட்டாக நடாத்திய பெரும் சமர்

## ■ பூநகரி வெற்றி விழாவில் ராதா

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பூநகரிச் சமர் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்திவிட்டது. இந்தச் சமரில் இதுவரை என்றுமே நிகழாவகையில் பெருந்தொகையான அரச படைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பல இராணுவத் தளங்களையும் கடற்படைத் துறையையும் கொண்ட ஒரு பெரிய கூட்டுப்படைத் தளம் புலிப்படையால் அழிக்கப்பட்டிருக்கிறது. பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் கூட்டாகச் சேர்ந்து நடாத்திய மிகப் பெரிய சமர் இது. இந்தப் போர் நிகழ்வை திட்டமிட்டுச் செயற்படுத்திய பெருமை எமது தலைவரைச் சாரும்.

பூநகரிச் சமரில் பெண் போராளிகளின் பங்கு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. பெரும் எண்ணிக்கையிலான பெண் போராளிகள் இந்தத் தாக்குதலில் பங்கு கொண்டனர். இவ்வாறு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற பூநகரி முகாம் தகர்ப்பு வெற்றி விழாவில் மகளிர் படையணியின் மூத்த உறுப்பினர் ராதா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-
பூநகரிச் சமர் நீண்டகாலமாகவே திட்டமிடப்பட்ட ஒரு சமர். நீண்டகாலமாகவே இதற்கான பயிற்சிகள் நடைபெற்றன. இந்தப் பயிற்சிகள் மிகவும் கடினமானவை. பூநகரிச் சமரிலே நாம் வெற்றி பெறுவதற்காக எத்தனையோ துன்பங்களை எதிர்கொள்ள வேண்டிவந்தது. மிகவும் கடினமான பயிற்சி. மழைகாலமாதலால் நிலம் எல்லாம் சேறு. மழையில் நனைந்தவாறு ஈர உடைகளுடன் இடைவிடாத பயிற்சி. மழையாலும் குளிராலும் வந்த வருத்தங்களைக்கூட யாரும் பொருட்படுத்தவில்லை.

பூநகரித் தளத்தை அழிக்க வேண்டும் என்ற எண்ணமே எல்லோர் மனங்களிலும் எழுந்து நின்றதால் எந்தத் தடைகளும் யாரையுமே பாதிக்கவில்லை.

இந்தத் தாக்குதலின்போது மகளிர் படையணிக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள காவலரண்களைத் தாக்கியழிக்கும் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. நீண்ட நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசத்தில் பெருந்தொகையான காவலரண்கள் அமைந்திருந்தன. இராணுவத்தினரின் பலமான எதிர்த்தாக்குதலுக்கு மத்தியிலே நாம் அந்தக் காவலரண்களைத் தாக்கி, கைப்பற்றி, அழித்தோம்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியின் சகல பிரிவுகளும் பங்குகொண்டன. முன்னெப்போதும் இல்லாத வகையில் தனித்துவமான சில பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டன. இப்போரின் ஆரம்ப கட்ட நடவடிக்கையில் இருந்து இறுதி நடவடிக்கை வரையில் முழுமையாக பங்காற்றின.

பூநகரிச் சமரிலே பெண் புலிகளின் மனோதிடம், உறுதி என்பன வெளிப்பட்டன. அவர்களின் வீரத்தை எடுத்துக்காட்டும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை சொல்கிறேன்.

லெப். கேணல் பாமா போருக்குப் புறப்பட்டுப் போகும்போது இந்தச் சண்டையிலே தான் ஒரு நீருந்து விசைப்படகைக் கைப்பற்றுவதாகச் சொல்லிவிட்டுப் போனார். சொன்னதுபோலவே ஒரு படகைக் கைப்பற்றினார். பெண் புலிகளின் போராற்றலுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினர் இப்போதெல்லாம் பெரும் தாக்குதல்களில் பங்கு வகித்து வருகின்றனர். பெரிய பரிமாணம் கொண்ட தாக்குதல்களில் பங்கேற்று பெரும் சாதனைகளைப் புரியுமளவுக்கு வளர்ச்சி கண்டு வருகின்றனர். ஒவ்வொரு சமரும் அவர்களுக்குப் புதிய அனுபவங்களையும் புதிய நம்பிக்கைகளையும் ஏற்படுத்தி வருகின்றது என்றார். ■

# அமைதி உருவாக வேண்டின் நாட்டிலேயே முயற்சி தேவை

## மலேசிய ஆயர் தெரிவிப்பு

"ஒரு நாட்டில் அமைதி உருவாக வேண்டுமானால், அந்நாட்டுக்குள் இருந்தே அதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும்" என மலேசியாவின் கத்தோலிக்க ஆயர் மேதகு அன்ரனி செல்வநாயகம் கூறியுள்ளார்.

கடந்த வருடம் இவர் யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது தெரிந்ததே. ஒரு நாட்டில் அமைதி ஏற்படுவதற்கு வெளிநாட்டவர்களின் உதவி தேவைப்பட்டாலும், அமைதியைக் கொண்டு வருவதற்கு முக்கிய பங்காற்ற வேண்டியவர்கள் அந்நாட்டவர்களே என்பதை இலங்கை அனுபவம் கற்றுத் தந்துள்ளது எனவும் ஆயர் கூறியுள்ளார். ■

# எல்லை முகாம்களில் இருந்து டாங்கிகள் அகல்கின்றன

விடுதலைப் புலிகள் முகாம்களைத் தாக்கலாம் என்ற அச்சத்தால் இராணுவத்தினர் எல்லைப் புற முகாம்களைப் பலப்படுத்தும் முயற்சியிலும், தற்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

செட்டிக்குளம், பம்பைமடு, நொச்சிமோட்டை, மகாபச்சைக் கொடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறிய முகாம்களில் இருந்து தாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களை வவுனியா தலைமைப் படைத் தளத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பூநகரியில் நடந்தது போன்று இங்கும் நடைபெறாதிருக்கவே இந்த நடவடிக்கை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ■

# சூரியகந்த புதைகுழிகள் தோண்டும் பணி ஸ்தம்பிதம்

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து சூரியகந்த புதைகுழிகளைத் தோண்டும் பணி பாதிப்பு அடையக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாக சப்பிரகமுவ மாகாணசபை உறுப்பினர் சுனித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

நீதிபதியின் தீர்ப்பை அடுத்து அப்பகுதி மக்களும், பொலிசாரும் இணைந்து இப்புதைகுழிப் பகுதிக்கு பாதுகாப்பு வழங்கினர் என்றும் ஆனால் பொலிஸ் அறிவுறுத்தலைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் வழங்கிய பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பகுதியாக தோண்டப்பட்ட இப்புதைகுழிகள் குண்டர்களினால் அழிக்கப்படக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார். ■

### வடக்கு - கிழக்கு மாகாணங்களிற்கு

# இடமாற்றப்படும் பொலிசார் பணிக்கு சென்றேயாக வேண்டும்

## ■ சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் உத்தரவு

சிறீலங்காவின் வடக்கு - கிழக்கு மாகாணங்களிற்கு இடமாற்றம் பெறும் பொலிசார் அப்பகுதியில் கட்டாயம் கடமையாற்றியே ஆக வேண்டும். இவ்வாறு சிறீலங்காப் பொலிஸ் தலைமையகம் கண்டிப்பான உத்தரவு ஒன்றை அண்மையில் பிறப்பித்துள்ளது.

உயர் அதிகாரிகள் முதல் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர் வரை இது பொருத்தமானது எனவும், அப்பகுதியில் கடமையாற்ற விருப்பம் தெரிவிக்காதோர் தமது சேவையிலிருந்து விலகிக் கொள்ளல் வேண்டும் எனவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் பொலிசார் நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றத் தயார் என்ற ஒப்பந்தத்துடனேயே சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் எனவும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக் காட்டியுள்ளது. ■

# பீரங்கித் தாக்குதலால் வல்வை ஆஸ்பத்திரி சேதம்

வல்வெட்டித்துறையில் கடற்படையினர் மேற்கொண்ட செல் தாக்குதலின்போது வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை சேதமடைந்தது. வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகக் கண்ணாடி யன்னல்கள் மற்றும் உட்பகுதிக் கட்டிடங்களும் சேதமடைந்தன. பிரசவ வார்ட் கட்டிடப் பகுதிமீது மேற்கொண்ட தாக்குதலின்போது கூரைப் பகுதி சேதமடைந்தது. கர்ப்பிணிகள் பாதுகாப்புக் கருதி வைத்தியசாலையை விட்டு வெளியேறினர். இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளியான ஏ. வேலுப்பிள்ளை என்பவர் அதிர்ச்சியினால் மரணமடைந்தார். இவ்வைத்தியசாலையில் நடைபெற இருந்த பிரசர் கிளினிக்குக்கு 50 நோயாளிகள் வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் மயிரிழையில் தப்பிக் கொண்டனர். ஊழியர்கள் மறைவிடங்களில் இருந்ததினால் ஆபத்துத் தவிர்க்கப்பட்டது. வைத்தியசாலை மீதான தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட செல் குண்டு, வைத்திய அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளது. ■

# விடுதலைப் புலிகளுக்கு ஆசி வேண்டி இந்து குருமார் மகா வேள்வி

பூநகரி கூட்டுத்தள தகர்ப்பு வெற்றியை வாழ்த்தியும் விடுதலைப் புலிகளுக்கு ஆசி வழங்கியும், தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் இன்னும் பல வெற்றிகளைக் குவிக்கப் பிரார்த்தித்தும் நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் இந்துமத குருமார் ஒன்றியத்தினால் மாபெரும் வேள்வி நடாத்தப்பட்டது. தமிழீழத்தின் ஐம்பதுக்கும் மேற்பட்ட குருமார் கலந்து கொண்டு வேதம் சொல்லி பிரமாண்டமான ஓமகுண்டத்தில் தீ வளர்த்து இவ்வேள்வியை நடாத்தினார்கள். சிவசிறீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வேள்வியில் மக்களும் விடுதலைப் புலிப் போராளிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். யாழ்ப்பாணத்து அனைத்து தேவஸ்தானங்களின் குருமார்களும், சிரோமணிகளும் கலந்துகொண்டனர். இந்த யாகத்தில் இந்து மத குருமார் ஒன்றிய குருகுல மாணவர்கள், சிவானந்த குருகுல மாணவர்கள், தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள் மற்றும் சிறீதேவி குருகுல மாணவர்கள் ஆகியோர் தேவபாராயணம் செய்தனர். இந்த வேள்வி சுமார் நான்கு மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் தமிழீழத்துக்கான ஆசீர்வாதத்துடன் வேள்வி நிறைவெய்தியது. ■

### யாழ் குடாநாட்டில் மட்டும்

# 57, 000 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிப்பு

யாழ் குடாநாட்டில் பெய்த பெரு மழையினால் 57,326 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர்கள் கொடுத்த விபரத்தின்படி தெரியவந்துள்ளது.

வெள்ளப் பாதிப்புகள் தொடர்பாக யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு தத்தமது பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை அவர்கள் சமர்ப்பித்தனர்.

இதன்படி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 6158 குடும்பங்களும், நல்லூரில் 7657 குடும்பங்களும், தெல்லிப்பளையில் 932 குடும்பங்களும், கோப்பாயில் 7956 குடும்பங்களும், கரவெட்டியில் 1676 குடும்பங்களும், பருத்தித்துறையில் 2363 குடும்பங்களும், மருதன்கேணியில் 220 குடும்பங்களும், சாவகச்சேரியில் 13000 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் 5758 குடும்பங்களும், சங்கானையில் 6206 குடும்பங்களும், உடுவிலில் 4100 குடும்பங்களும், வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதாகவும், இவற்றுடன் கெற்பலி, நாவற்குழி ஆகிய அகதி முகாம்களில் இருந்தும் வெள்ளத்தால் வெளியேறி சாவகச்சேரியில் மேலும் 1300 குடும்பங்கள் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையை மட்டுமே உதவி அரசாங்க அதிபர்கள் சமர்ப்பித்துள்ளதாகவும் எவ்வளவு மக்கள் இடம்பெயர்ந்தார்கள், வீடுகள் மற்றும் சொத்திழப்புக்கள் பற்றிய மேலதிக விபரங்கள் எவையும் தெரியவில்லையென செயலக சமூக சேவை பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இப்பகுதிகளில் வெள்ளம் வடிந்தபின்னரே அவ்விபரங்கள் தெரியவருமென தெரிவித்த அவர் குடாநாட்டில் உள்ள மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவித்தார். ■

# வெள்ளத்தில் தவறி வீழ்ந்த சிறுவன் பரிதாப மரணம்

தொடர்ந்து பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து கொடிகாமம் அரசினர் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் வெள்ளத்தில் தவறி வீழ்ந்து மரணமானார்.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த குணரட்ணம் சுதாகரன் என்னும் சிறுவனே இவ்வாறு மரணமானார். இவர் இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியிருந்த வேளையில் அங்குள்ள புகையிரதப் பாதைக்குச் சென்றபோது அருகிலுள்ள குட்டையில் தவறி வீழ்ந்து மரணமாகியுள்ளார். இவரது பெற்றோர்கள் தேடியும் காணாத நிலையில், மறுநாள் அருகிலுள்ள குட்டையில் சடலமாக மீட்கப்பட்டார். ■

# பயணிகளை ஏற்றிச் செல்ல கப்பல்கள் பின்னடிப்பு

கப்பல் மூலம் நோயாளிகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கொண்டு செல்வதற்கு கப்பல் கம்பனிகள் மறுத்துள்ளன. இதனால் நோயாளிகள் பலர் பெரும் பாதிப்புக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி கப்பல் கம்பனிகள் கப்பல்கள் எனவும், அதில் பயணம் செய்யும் பயணிகளுக்கு காப்புறுதி எதுவும் இல்லாத காரணத்தால் நோயாளிகளைக் கொண்டு செல்லும்போது, அவர்களுக்கு ஏதாவது நிகழ்ந்தால் அதனால் தாங்கள் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும் தெரிவித்ததாக தெரியவருகின்றது. ■

# உலகத்தின் தலைசிறந்த கெரில்லாத் தலைவர் பிரபாகரன்!

## இந்திய இராணுவ தளபதி புகழாரம் !

**"சண்டே" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியாத திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனால் வழிநடத்தப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்றைய மிகப் பெரிய கெரில்லாப் படையா? ஆம். நிச்சயமாக என்பதே முழுமையான பதிலாகும். சிறீலங்காவின் பாதுகாப்புப் படையை அடிபணிய வைத்த அழகும், அதற்கு முன் இந்திய அமைதிப்படையின் (I. P. K. F.), பராக்கிரமத்திற்கு ஈடாக மட்டுமல்ல, அதற்கு மேலாகவும் செங்களம் ஆடிவந்த விடுதலைப் புலிகள் மாசேதுங்கின் புரட்சிப் புகழ் மண்டபத்தில் இடம்பிடிக்க வேண்டியவர்கள்.

சிறீலங்கா இராணுவத்தின் முதுகெலும்பை பூநகரிச் சமரில் புலிகள் நொருக்கியது, இதற்கு முந்திய அவர்களது பல வெற்றிகரமான தாக்குதல்களின் வரிசையில் இடம்பெறுகிறது. அதிகாலையில் பூநகரி மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் பிரபாகரனின் யுத்த தந்திரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது என்றால் அதன் நேரத்தேர்வு அரசியல் நுட்பத்தை பிரதிபலித்தது. தமிழீழத்திற்குப் பதிலாக ஒரு இணைப்பாட்சித் தீர்வை புலிகள் ஆராயத் தயார் என்ற அறிவிப்பு, இராணுவப் பலவீனம் காரணமாக விடுவிக்கப்பட்டதன்று என்பதைப் பூநகரித் தாக்குதல் மூலம் அரசுக்கு ஞாபகப்படுத்தியிருக்கிறார்கள்.

பூநகரி மீதான தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகளின் 'தவளைப் பாய்ச்சல்' படையினர் நீந்திச் சென்று நாகதேவன்துறை ராடர் மற்றும் தொலைத் தொடர்புச் சாதனங்களைத் தூள் தூளாக உடைத்தெறிந்தார்கள். ஒரு இரட்டை இலக்கத் தாக்குதலில் கடற்புலிகளும், கரும்புலிகளும் எதிரிப் படையினரை முற்றிலும் எதிர்பாரா விதத்திலும், சாதுரியமாக ஏமாற்றியும், எதிர்கொண்டபோது அவர்கள் (எதிரிப் படையினர்) தங்கள் சாவுப் பொறிக் குழிகளுக்குள் அழுகிய மாம்பழங்கள் போல வீழ்ந்தார்கள். இல்லாவிட்டால் 600 பேர் பலம் கொண்ட கெரில்லாப் படையினர் தற்காப்பு இராணுவ அரண்களுக்குள் நிலை கொண்டிருந்த சிறந்த கஜபாகு அணி மற்றும் சிறீலங்கா மென் காலாட்படை அணி இவற்றைச் சேர்ந்த ஆயிரம் துருப்புக்களைக் கொன்றும், அதேயளவு படையினரைக் காயப்படுத்தியும் அசாதாரண துணிச்சலுக்கு அசுரத்தனமான தைரியம், தந்திரத்துக்கு பூநகரி ஒரு டசின் விக்டோறியாப் பதக்கங்களை பரிசாகப் பெறவேண்டும்.

தமிழீழத்தில் இந்திய அமைதிப் படைக்கு ஒரு இலக்கு இருக்கவில்லை. இதனால் எதிர்காலத்துக்குத் தேவையான பாடங்கள் எதையும் படிக்காமல் வீணே வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் மிச்சம்.

இந்திய இராணுவம் சுலபத்தில் அசைக்க முடியாத பளுவான மரபு ரீதியான இராணுவம். இந்த இராணுவம் புலிகளை வசப்படுத்த அல்லது அடக்கத் திட்டமிட்ட இராணுவம் அல்ல. இருந்தும் இந்திய இராணுவம் சார்பாக சொல்லக்கூடிய ஒன்றுண்டு. தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த இந்திய இராணுவ முகாமையும் தாக்கவோ அல்லது அதன் மீது பூநகரியை ஒத்த தாக்குதலை நடாத்தவோ நினைக்கவில்லை. இந்திய இராணுவம் -புலிகள் இரு சாராருக்கும் இடையில் ஒரு ஆரோக்கியமான பரஸ்பர இராணுவப் புரிந்துணர்வு நிலவியது. இதன் காரணமாக இரு சாராரும் ஒருவரை ஒருவர் முறைப்பதோடு நின்றுவிட்டனர். ஒருவிதத்தில் யாழ்ப்பாணம், வவுனியா நீங்கலாக இந்திய இராணுவத்திற்கு எதிரான புலிகளின் சண்டையின் அளவும், உக்கிரமும் வெதவெதுப்பாகவே இருந்தது. இதனோடு ஒப்பிடும்போது சிறீலங்காப் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான புலிகளது போர், செய் அல்லது செத்து மடி என்பது போல் இருக்கிறது.

சிறீலங்கா இராணுவம் அண்மையில் அடுத்தடுத்து மூன்று பாரிய தோல்விகளைச் சந்தித்துள்ளது. ஐந்து இராணுவ முகாம்களை ஈழப்போர் -II இல் இழந்துள்ளது. இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் பூநகரியையே தாக்குப் பிடிக்க முடியாமல் அங்கிருந்து வெளியேற வேண்டி வரலாம். விடுதலைப் புலிகள் பெருந்தொகையான ஆயுதங்களையும் இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றியிருப்பது இராணுவச் சமபலத்தை புலிகள் சார்பாக மாற்றும் என்பது மட்டுமல்ல. அடுத்த ஒரு ஆண்டுக்குப் போதுமான ஆயுதக் கையிருப்பையும் பூர்த்தி செய்யப் போகிறது. முன்பு இந்திய இராணுவத்தை அடித்துத் துரத்த ஜனாபதிபதி பிரேமதாசா மட்டும் புலிகளுக்கு ஆயுத விநியோகத்தைச் செய்து கொண்டிருந்தார். ஆனால், இன்று இதனை சிறீலங்கா இராணுவமே கச்சிதமாக செய்துகொண்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளது அபாரமான, ஏன் கிட்டத்தட்ட பைத்தியக்காரத்தனமான அர்ப்பணிப்பு அவர்களிடம் காணப்படும் சிறிய இராணுவக் குறைபாடுகளை ஈடு செய்துவிடுகிறது.

இன்று இந்த உலகத்தில் வேறு எந்தப் போராளிகளும் புலிகளைப் போல, சோளம்பொரியை எளிதாகச் சாப்பிடுவதைப் போல சயனைட்டை விழுங்குவது இல்லை. கடந்த பல ஆண்டுகளாகப் புலிகள் மிகக் கட்டுப்பாடும், திறமையும் வாய்ந்த அதே சமயம் பல வியக்கத்தக்க இராணுவச் சாமர்த்தியங்களையும் கொண்ட ஒரு கெரில்லாப் படையாக பரிணமித்துள்ளது. பிரபாகரன் இன்று உயிரோடுள்ள கெரில்லாப் படைத் தலைவர்களில் மிகச் சிறந்த தலைவர் என்பதை மிக எளிதாகச் சொல்லிவிடலாம் -(Prabhakaran is easily the greatest living leader of a guerrilla movement of his time.)

இதற்கு மாறாக சிறீலங்காப் பாதுகாப்புப் படை சரிந்துகொண்டே போகிறது. குறிப்பாக அராலித்துறையில் டென்சில் கொப்பேக்கடுவ உட்பட கிட்டத்தட்ட வடக்கு இராணுவத் தலைமை புலிகளின் கண்ணிவெடியில் அகப்பட்டு அழிந்த பிற்பாடு, சிறீலங்கா இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரிப்பு, அதன் தரத்தையும் பயிற்சியுடைய போர் வீரர்களையும் குறைத்துள்ளது. உண்மையில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஒரு மாதப் பயிற்சித் திட்டம் டெல்லியிலுள்ள பாதுகாப்பு நிலையங்கள் தங்கள் காவல்காரர்களுக்கு அளிக்கும் பயிற்சிக் காலத்தை விடக் குறைவானது. கோர்வையான இராணுவ அதிர்ச்சி வெற்றிகள், தாங்கிகள், பீரங்கிகள், சிறீலங்கா இராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்டது விடுதலைப் புலிகளை எமகிங்கர்களாக உருவாக்கிவிட்டது. இதனால் சிறீலங்கா இராணுவத்திடம் இப்போது புலிகள் பற்றிய கிலி பிடித்துக்கொண்டுள்ளது. இங்கு இந்தியாவுக்கும் ஒரு படிப்பினை உண்டு. அரசு சாமர்த்தியமாக நடந்து காரியமாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தீவிரவாதிகள் எங்கு இருப்பினும் அரச பாதுகாப்புப் படையை விட ஒரு படி மேலேயே இருப்பார்கள்.

பூநகரியில் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய அழிவு, பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டப் போவதாகக் கூட்டாக அறிவித்த ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கும், இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவுக்கும் முகத்தில் கரி பூசப்பட்டதற்கு ஒப்பாகும். இது வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஒரு நேரடித் தேர்தலை நடாத்தும் திட்டத்திற்கு அடி கொடுத்திருக்கிறது.

இவை காரணமாக இராணுவ தினமான ஒக்டோபர் 10 ம் நாள் ஒரு வருட காலத்திற்குள் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டப் போவதாக சூளுரைத்த வைத்தியரத்னவின் கூற்றின் எஞ்சி நிற்கும் முக்கியத்துவம் என்ன? இதற்கு முன்பும் அரசியல்வாதிகளும் இவ்வாறான உறுதிமொழிகளை, இனப்பிரச்சினையை இரண்டு முதல் ஆறு மாத காலத் தவணையில் ஒழிக்கப் போவதாகக் கூறிய உறுதிமொழிகளை அள்ளி வீசியிருக்கிறார்கள். ஆனால், வைத்தியரத்னாவின் சூளுரை மிகவும் வித்தியாசமானது. ஏனென்றால், இப்போதுதான் முதன் முதலாக இராணுவத் தளபதியின் அறைகூவல் ஜனாதிபதியின் அறைகூவலோடு ஒன்றாக விடப்படுகின்றது. இது அரசியல் வழிமுறைகளை உறையப் போடப்பட்டதை வெளிக்காட்டுகின்றது. 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலையும், வட - கிழக்கு இணைப்பிற்கான நேரடித் தேர்தலையும் நடாத்தும் திட்டமொன்று இருக்கின்றது. பிரேமதாசா போலல்லாது ஜனாதிபதி விஜயதுங்காவுக்கும் புலிகளுக்குமிடையில் பகை இருக்கிறது. இனப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என ஜனாதிபதி வர்ணித்துள்ளார். இதனைத் தான் பன்னிரண்டு மாத அவகாசத்துக்குள் ஒழித்துப் போடுவதாக வைத்தியரத்னா கூறியிருந்தார்.

இதுவரை எல்லாம் நல்லதுதான். இரண்டாவது ஈழப்போர் தனது நாலாவது ஆண்டில் சிங்கள இளைஞர்கள் மத்தியில் சிறீலங்காப் பாதுகாப்புப் படை சந்தித்துள்ள படுதோல்விகளையும், ஆள் இழப்புக்களையும், இராணுவ நடவடிக்கைகளின் எண்ணிக்கைச் சரிவையும், இராணுவத்திலிருந்து ஓடிப்போன பத்தாயிரம் துருப்புக்களை வளைத்துப் பிடிக்க முடியாமல் இருப்பதையும் பார்க்கும் பொழுது எல்லாவித, கவர்ச்சியையும் இழந்துவிட்டது. பயங்கரவாதத்தை ஒழிக்க அரசியல் - இராணுவ குறிக்கோள்களுக்கு ஆதரவாகப் பாதுகாப்பு மூலோபாயங்கள் தெளிவாக்கப்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்தத் தேவையான வளங்களும், புலிகளைத் தோற்கடிக்கத் தேவைப்படும் திறன்களும் சிறீலங்காப் படையினருக்குக் கைக்கெட்டும் அளவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பெருமளவு பாதுகாப்புச் செலவு அதிகரிக்கப்பட்டு (மொத்த வருமானத்தில் 6 விழுக்காடு) இராணுவப் பலத்தை இருமடங்காக உயர்த்தத் திட்டம் இருந்தும் இது சாத்திமாகும் என்று நம்ப இடமில்லை.


பூநகரி அழிவுக்கு முன், இராணுவ தினத்தில் எடுக்கப்பட்ட சூளுரை, மீண்டும் சிறீலங்காவை முடிவில் அடைக்கப்பட்ட ஒரு வழிப்பாதையில் மீண்டும் தள்ளப்போகிறதா? வைத்தியரத்னாவின் புளுகு இராணுவ மோதலை வடக்கில் உள்ளடக்கி மட்டுப் படுத்திவிட்டு, கிழக்கைத் தாக்கிப் பிடித்து வட - கிழக்கு இணைப்புக்கு நிரந்தரமாக ஒரு முற்றுப் புள்ளிவைக்கும் போர் யுக்தி என நம்ப இடமுண்டு. இந்த மட்டுப்படுத்தப்பட்ட இராணுவக் குறிக்கோள் யாழ்ப்பாணத்தை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதைத் தவிர்த்து பின் விரும்பிய நேரத்தில் யாப்பாணத்தின் மீது படையெடுக்க வழிவகுக்கும். இருந்தும் சிறீலங்கா இராணுவத்தின் கடந்த காலத்தையும், பூநகரி இழப்புப் பட்டியல்களையும், கணக்கில் எடுக்கும்போது இந்த மட்டுப்படுத்தப்பட்ட குறிக்கோள்கூட நிறைவேறும் என்பது அசாத்தியமே. பூநகரி இராணுவத் தோல்விகள், தவிர்க்க முடியாத விசாரணைகள், படையதிகரிப்புக்கள், பாதுகாப்பு முகாம் சீரமைப்புக்கள் இவற்றுக்கு வழிகோலியுள்ளது.

கடந்த இரண்டு வருடத்துக்குள் ஐந்து தடவை போரின் உயர் போக்கை நிர்ணயிக்கும் இராணுவ இயந்திரத்தின் வடிவமைப்பு மறுசீர் செய்யப்பட்டுள்ளது. கடைசியாக இவ்வடிவமைப்பு பூநகரித் தாக்குதலுக்கு ஒரு மாதத்திற்கு முன் செய்யப்பட்டது.

இராணுவ ரீதியாக இராணுவம் பூநகரிக்குப் பின் ஆட்டம் கண்டுள்ளது. இராணுவத் தளபதி வைத்தியரத்னா ஓய்வில் போகக் கட்டாயப்படுத்தப்பட்டு அவரது இடத்திற்கு அவரது பரிந்துரைக்கு எதிராக இராணுவத் தளபதி மேஜர் ஜெரி டீ சில்வா பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில், இப்போதுதான் முதன் முதலாக ஒரு இராணுவத் தளபதி புகழ் இழந்து எந்தவித எதிர்ப்பும் இன்றி இராணுவத்திலிருந்து வெளியேற வேண்டி வந்துள்ளது. அவரை வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்க இருப்பது சிறீலங்கா இராணுவத்திற்கும் - சிறீலங்கா அரசுக்கும் ஏற்பட்ட

தொடர்ச்சி ஸ் பக்கம் ....



# டி.பி.விஜேதுங்கவின் பேரினவாத அரசியல் முகம் சிங்கள தலைமைத்துவத்திற்கு சான்றாகிறது!

**வே.பாலகுமாரன்**

இந்த உலகின் மிகப் பெரிய துயரம் என்னவென்றால் எல்லாமே ஏற்கனவே சொல்லப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு முறையும் திரும்பவும் முதலிருந்தே சொல்ல வேண்டிய நிலை இருப்பதுதான் என்று கூறப்படுவதுண்டு. இப்போது டி. பி. விஜேயதுங்கவுக்கு இக்கூற்று முற்றிலும் பொருத்தமாகிவிட்டது. இதுவரை காலமும் தோன்றாத தலைமையொன்று இப்போது தான் தோன்றியிருப்பது போலவும், இப்படிப்பட்டதொரு தலைமைக்காகத்தான் இதுவரை காலமும் சிங்கள இனம் காத்துக் கிடந்ததுபோலவும், தோன்றும் வண்ணம் புதிய ஜனாதிபதி தோற்றமளிக்கிறார். சுத்தச் சிங்களவன் என்றும் அவருக்கு இப்போது நற்சான்றிதழ் வழங்கப்படுகின்றது. தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் முக்கியமான காலகட்டமொன்றிலே அவர்களது விடிவைப் பொறுத்தவரையில் முக்கிய பாத்திரமொன்றை இவர் வகிக்கப்போகிறார். ஏனெனில், பகுத்தறிவுக்கும் பரந்த மனப்பான்மைக்கும் உண்மைக்கும் உலக நியதிக்கும் புறம்பாக, மறுதலிப்பாக மாறுபட்ட நிலைப்பாடு ஒன்றைக் கைக்கொள்ளும் டி. பியின் காலகட்டம் மிக வித்தியாசமாக அமையப் போவதற்கான அறிகுறிகள் யாவுமே இப்போது தென்படத் தொடங்கிவிட்டன.

சிங்கள அரசுக்கு வேண்டாத தொல்லையாக மாறிவிட்ட மாகாணசபை குத்துவெட்டுக்களோ, கிழக்கில் தேர்தல் ஒன்றை திணிக்க முயலும் டி. பியின் முனைப்புக்களோ அல்லது தொண்டாவின் அரசியல் நிலைப்பாடுகள் வெற்றிகரமான அவரின் கடைசி நிமிட பின் வாங்கல்களோ எல்லாமே தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் இரண்டாம் பட்சமானவைதான், என்றாலும் பல்லாண்டு காலமாக முன்னெடுக்கப்படும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நீண்ட கால விளைவுகளின் வெளிப்பாடுகளாக இவை அமைவதால், இங்கு இவை பற்றி சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது. ஏனென்றால் 'குளிக்கப்போய் சேறு பூசியதுபோல்', தமிழீழத் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்போய் சிங்களவர்க்கு மாகாண சபையை பெற்றுக்கொடுத்த பெருமை சிங்களத் தலைமைக்கே சேரும் அல்லவா! சிறீலங்கா அரசியல் எவ்வளவு கீழ்த்தரமான கேவலமான ஜனநாயகக் கேலிக்கூத்தாக மாறிவிட்டது என்பதனை, மாகாண சபை ஆட்கடத்தல்களும் ஆளுநர்மாரின் அலங்கோலங்களும் மிகத் தெளிவாக்கிவிட்டன. 'மெல்லெனப் பாயும் நீர் கல்லையும் உருக்குவதுபோல்' படிப்படியாக உறுதியாக முன்னெடுக்கப்படும் விடுதலைப் போராட்டம், சிங்கள அரசியலில் அடித்தளத்தையும் அதன் தூணாக இருக்கும் இராணுவ கட்டமைப்பின் உயிர்நாடியையும் நிலைகுலையச் செய்யும் என்பதற்கு இவையெல்லாம் தக்க உதாரணங்களாகும்.

வட - கிழக்கு இணைப்பில்லை, சலுகைகள் எதுவும் வழங்குவதற்கில்லை, இனப்பிரச்சினையே இல்லை என தமிழரைப் பொறுத்தவரை எல்லாமே இல்லைப் பாட்டுப் பாடும் டி. பி. அவர்கள், ஒளிவு மறைவின்றி முகமூடி போடாமல் சிங்கள பேரினவாத அரசியல்வாதிகளின் உண்மை முகத்தினைப் பிரதிபலிப்பதும் நன்மைக்குத்தான். ஏனென்றால் அப்போதுதான் காலம் காலமாக சிங்களத் தலைமை இவ்வாறு தான் இருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று கூற வேண்டுமா என்ன? பழைய நாடகமாயினும் ஒரு புதிய காட்சியை டி. பி. இப்போது சேர்த்திருக்கிறார். கண்டிய மேட்டுக் குடியாளரான டி. பி, காலம் காலமாக கண்டிய சிங்கள மக்கள் அடக்கியொடுக்கப்பட்டது போலவும், முன்னர் ஆங்கிலேயர் கண்டியில் நிலங்களை அபகரித்ததைக் காரணம் காட்டியும், தற்போது இந்நிலங்கள் யாவும் மலையகத் தமிழ் மக்கள் வசமிருப்பது போலவும் சித்தரித்து பாவனை காட்டுகிறார். நூற்றாண்டு கால வரலாற்றினை புதைக்கப் பார்க்கும் இவர்கள் சொல்ல வருவது என்ன? மத்திய மாகாணத்தில் மலையகத் தமிழர் ஆதிக்கம் பெருகுகின்றதாம்.

யாழ்ப்பாணத்திற்கு அடுத்தபடியாக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியாவில் தமிழ் மணம் கமழுகிறதாம். இப்படியிருக்கிறது கதை, மலையக மக்கட்கு பிரசாவுரிமை, வாக்குரிமை வழங்கப்பட்டது. அவர்களை எப்போதும் ஐ. தே. கட்சிக்கே வாக்களிக்கப்பண்ணி, அதன் மூலம் தன்னை நிலைநிறுத்த முயலும் தொண்டாவிற்கு இப்போக்கு சற்று மிரட்சியை கொடுத்திருக்கக்கூடும்: இருக்கும் நாடே சொந்த நாடு. இருக்கும் மண்ணே சொந்த மண் என மலையக மக்கள் இப்போது நினைக்கத் தொடங்குவதும் தமது சிக்கல்களைத் தாமே தீர்க்க முற்படுவதும் சிங்கள அரசுக்கு மட்டுமல்ல தொண்டாவிற்கும் உவப்பான காரியமாக இருக்க முடியாது. எனவே மலையக மக்கள் அதிருப்தியை காட்ட தமது சொந்த வாழ்வின் துயரங்களை, சுமைகளை மாற்ற வழிதேட முற்படும் போது அதனை இனவாதமாக்க டி. பி முனைகிறார். தொண்டாவே நிலைமைகளின் தீவிரத்தைத் தணிக்க 300 நாள் வேலை, குடியிருப்புக்கள் சொந்தமாக்கப்படல், உள்ளூர் நிறுவனங்கட்கு மீண்டும் தோட்ட நிர்வாகங்களை கொடுக்காதிருத்தல் என கோரிக்கைகளை முன்வைக்கிறார். எனவே அடிப்படையைப் பார்க்கும் பொழுது டி. பியும் தொண்டாவும் ஒரே நலன்களை பிரதிபலிக்கின்றார்கள். எனென்றால் தேயிலைத் தோட்ட உரிமையாளர் என்ற வகையில், தொண்டாவிற்கும் மலையகத்தில் சிங்கள அரசால் பாதுகாக்கப்பட வேண்டிய நலன்கள் உள்ளன. எனவே "தோசை சுடுவதற்குத் தயாராக இருப்பதுபோல், எப்போதும் தோசைக்கல்லைச் சூடாக வைத்திருப்பதுதான் அவர்களது அரசியல்" என மூத்த சிங்கள பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ் அரசியல் ஒன்றும் எமது மக்களுக்கு புதுமையானது அல்ல. காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வரும் மலையக மக்களை அரசியல் விழிப்புணர்வு பெறாமல் வைத்திருக்கவே வெவ்வேறு திசைகளில் சனாதிபதியும் அமைச்சரும் முனைவது நாம் சொல்ல வேண்டிய செய்தியாகும். எனவே மலையகம் பற்றிய டி. பியின் இனவாத பல்லவியும், அதற்குச் சற்று மறுப்பாக அமையும் தொண்டமானின் பல்லவியும் இப்படியே தொடரும்.

ஆனால் இங்கு வியப்புக்குரிய விடயம் ஒன்று உண்டு. காமினி திசநாயக்காவை தனது அரசியல் எதிரியாக இதுவரை காலமும் கருதிய தொண்டாவும், தொண்டாவை நாயின் காதில் இரத்தம் குடிக்கும் நாயுண்ணியாக வர்ணித்த காமினியும் இன்று ஒன்று சேர்ந்திருக்கும் வியப்புத்தான் இது. டி. பியோடு உறவை சீர்படுத்திய பின்னரும் காமினியை மத்திய மாகாண முதலமைச்சர் ஆக்குவேன் என தொண்டா கூறியதன் மர்மம் என்ன? இதற்கான சரியான பதிலை தொண்டா இதுவரை கூறாத போதும், அவர் இறுதியாக இந்தியாவிலிருந்து திரும்பிய பின்னர் தன்னிலையை விளக்க விடுத்த அறிக்கையில் பதில் மறைந்திருக்கிறது. அவ்வறிக்கையில் அவர் அழுத்திக் கூறுவது, பிரேமாவின் காலத்திலேயே தோட்ட நிர்வாகங்களை தனியார் நிறுவனங்களுக்கு கையளிப்பதை தானே முதலில் வரவேற்றதாகவும் ஆனால் உள்ளூர் நிறுவனங்களுக்குக் கொடுப்பதை தான் கடுமையாக எதிர்த்ததையும் குறிப்பிட்டுள்ளார். அப்போது இந்தியாவின் தனியார் நிறுவனங்கள் பல தோட்ட நிர்வாகங்களை பொறுப்பெடுக்க விரும்பியதற்கு சிங்கள பேரினவாதிகள் கடும் எதிர்ப்புக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் கொழும்பு அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டது போல், தொண்டா அண்மைக் காலமாக காட்டிவரும் சலசலப்புகளுக்குப் பின்னே மலையக மக்கள் நலன்கள் பற்றிய அக்கறை மட்டுமல்ல, இந்தியக் கம்பனிகளின் நலன்கள் பற்றிய அக்கறைகளும் உண்டு என்று குறிப்பிட்டதை நாம் கவனத்தில்கொள்ள முடியும். எனவே 'சோழியன் குடும்பி சும்மாவாக ஆடாது'. இப்பொழுது நாம் இந்தியாவின் பரம விசுவாசியான காமினி, இலங்கைக்கு அடுத்தபடியாக தேயிலை உற்பத்தியாக்கும் இந்தியா, தேயிலைத் தோட்ட உரிமையாளரும் மலையகத் தொழிற்சங்கத் தலைவருமான தொண்டமான் என மூன்று தரப்பையும் இணைத்துப் பார்க்க முடியும்.

தமிழீழ - மக்களைப் பொறுத்த வரையில் காலத்துக்குக் காலம் அவர்கள் முன்னே தோன்றி, சிங்களப் பேரினவாதம் என்னும் குதிரையில் ஏறிப்பாய்ச்சல் காட்டிய பலரை அறிவர். தமிழர்களின் தோலில் செருப்பைத் தைத்துப் போடுவேன் என்ற ஆர். ஜி. சேனநாயக்கா, குண்டர்களை ஏவி தமிழர்களைக் கொன்றொழித்த சிறில் மத்தியூ, போர் என்றால் போர் என்று கொக்கரித்த ஜே. ஆர், இந்தியா இங்குவர பதினாறு நிமிடங்கள் எடுக்கும் என்றால் பதினாறு செக்கனில் தமிழர்களை அழித்துவிடுவேன் என்ற காமினி திசநாயக்கா, இதே வரிசையில் அத்துலத்முதலி, றஞ்சன் விஜயரட்னா, பிரேமதாசா. அண்மையில் புலிகளின் கழுத்து எமது கையில் என்று கூறிய சிசிலும், ஏறிச் சறுக்கிய குதிரையில் இப்போது ஏறியிருக்கும் டி. பி. சில காலம் அதில் சவாரி செய்யக் கூடும். எனவே இன்று தமிழீழ மக்கள், தலைவர் பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினச் செய்தியில் குறிப்பிட்டதுபோல் தமிழரின் நியாயமான உரிமைகளை டி. பியின் சிங்கள அரசு வழங்கும் நிலையிலும் இல்லை. அவர்களிடம் கேட்டும் பெறும் நிலையில் தமிழீழ மக்களும் இல்லை என்பது நிதர்சனமான உண்மை அல்லவா? ■

## வடமராட்சி கரையோரம் மீது அகோர பீரங்கித் தாக்குதல்

### ■ இரு வயோதிபர்கள் அதிர்ச்சி மரணம்

வடமராட்சிக் கரையோரப் பகுதிகள் மீது சிறீலங்காக் கடற்படைப் பீரங்கிக் கப்பலில் இருந்தும், படகுகளில் இருந்தும் அகோர பீரங்கித் தாக்குதலும், கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டன. சுமார் ஒரு மணி நேரம் நடத்தப்பட்ட இத்தாக்குதலின் போது இரு வயோதிபர்கள் அதிர்ச்சியினால் மரணமடைந்ததோடு ஐந்து பேர் பீரங்கித் தாக்குதலினால் காயமடைந்தனர். இத்தாக்குதலின்போது வைத்தியசாலைகள், வீடுகள், கட்டிடங்கள் பல சேதத்துக்குள்ளாகின. தாக்குதல் பருத்தித்துறை முனையிலிருந்து வல்வெட்டித்துறை ஈறாக தொடர்ந்தது.

இக் கடற்பரப்பிலிருந்து ஒரே நேரத்தில் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான 'வீரய சூரய'வுடன், இரண்டு டோறா விசைப்படகுகளும் ஒன்றாக இணைந்து இத்தாக்குதலில் ஈடுபட்டன. இத்தாக்குதலின்போது சக்கோட்டை வாசியான சுவாம்பிள்ளை பேர்னாட் (வயது 70) என்பவரும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஏ. வேலுப்பிள்ளை (வயது 66) என்பவரும் அதிர்ச்சியினால் மரணமடைந்தனர்.

ஊரிக்காடு மயிலியதனையைச் சேர்ந்த ப. சிறீதரன் (வயது 22) என்ற இளைஞர் கையிலும் நெஞ்சிலும் படுகாயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலும் சக்கோட்டையைச் சேர்ந்த செ. வசந்தகுமார் (வயது 22), அன்ரன் ஜெயக்குமார் (வயது 25), வியாபாரிமூலையைச் சேர்ந்த பொன்னுத்துரை (வயது 26), அ. சந்திரகுமார் (வயது 13) ஆகியோர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

இத் தாக்குதலையடுத்து அல்வாயில் தனபாலசிங்கம், சின்னத்துரை, வியாபாரிமூலையில் வேதாரணியம், முருகுப்பிள்ளை, சின்னையா, புலோலி மேற்கில் விஜயராசா நடராசா சக்கோட்டையில் ஜேசுதாஸ், முனையில் இந்திரலிங்கம் என்போரின் வீடுகளும் மற்றும் சனசமூக நிலையக் கட்டடங்களும் சேதத்துக்கு உள்ளாகின.

கடலில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலையடுத்து மீனவர்கள் ஒருவாறு கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர். தாக்குதல் செய்தவாறு வல்வெட்டித்துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடற்படையினர் மீது கடற்புலிகள் எதிர்த் தாக்குதலைத் தொடுத்ததையடுத்து சிறீலங்காக் கடற்படையினர் தூரச் சென்று மறைந்தனர். ■

## தும்புத் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை

தமிழீழத்தில் கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை தெரிவு செய்து கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தினூடாக பல்வேறு உதவிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகிறது.

இதன் அடிப்படையில் தும்புத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் நுணாவில் மத்திய கிராமத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் 10 குடும்பங்களைத் தெரிவுசெய்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினர் தலா 4750/-வீதம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ■

## மெய்க் காவலர்களுக்கு அமெரிக்காவில் பயிற்சி

சிறீலங்கா ஜனாதிபதி, பிரதமர் போன்றவர்களின் மெய்க்காவலர்களை சிறீலங்கா அமெரிக்காவுக்கு அனுப்பி பயிற்சி அளிக்கின்றது. சிறீலங்காவின் கருத்துப்படி யுத்தம் எல்லை கடந்த நிலையில் நடைபெறுகிறது எனவும், எனவே சிறீலங்கா அரசாங்கத்தின் தலைமை பதவிகளில் இருப்பவர்களின் மெய்க்காவலர்களுக்கு அதிநவீன பயிற்சி அளிக்கப்பட வேண்டுமெனவும் சிறீலங்காப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் கருதுகின்றன. இதன் அடிப்படையில் சிறீலங்கா ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் மெய்க்காவலர்களுக்கு அமெரிக்கா பயிற்சி அளிக்கிறது எனத் தெரியவருகிறது. ■

# வடக்கில் நடப்பது என்ன?

## சிங்கள செய்தியாளர் முன்னுள்ள கேள்வி

'சிங்களச் செய்தியாளர்கள்' வடக்கு நோக்கிய வருகை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது. இவர்கள் ஆங்கில, சிங்கள மற்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அண்மையில் யாழ்ப்பாணம் வந்த செய்தியாளர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களவரே ஆகும். இந்த வகையில் அண்மைக் காலத்தில் இவர்களின் வருகையில் அதிகரிப்புக் காணப்படுகின்றமைக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

யாழ்ப்பாணம் வந்த இச் செய்தியாளர்கள் அனைவரும் தாம் முன்னர் வடபகுதிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயங்கள் பலவற்றை இராணுவம் தடுத்து விட்டது என்றும், தற்பொழுது பெருமுயற்சியின் பின்னரே வருவதற்கான அனுமதி கிடைத்தது எனவும் தெரிவிக்கின்றனர். செய்தியாளர்களின் இக் கூற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் ஒரு செய்தியாளர் அல்லது ஒரு பத்திரிகையைச் சார்ந்தவர்கள் இதனைக் கூறலாமா என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி சுமார் 40 மாதங்கள் கடந்து விட்டன. இக் காலப்பகுதியில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனமான பி. பி. ஸியின் செய்தியாளர் பல தடவை வந்து போயுள்ளார். பி. பி. ஸியின் தொலைக்காட்சிப் பிரிவும் வந்து போயுள்ளது அத்தோடு அவுஸ்திரேலிய செய்தியாளர்களும், வீடியோ படப்பிடிப்பாளர்களும் என வெளிநாட்டவர் பலர் வந்து போயுள்ளனர். வந்து போனவர்கள் சிலவேளை இரகசியமாகவும் இங்கு வந்து சேர்ந்தவர்கள் ஆகும்.

இந்நிலையில் சிங்களச் செய்தியாளர்கள் எவரும் ஏன் இவ்வாறான பெரும் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை? மேலும் விடுதலைப்புலிகள் இயக்கம் சிங்களச் செய்தியாளர்கள் எவரும் வந்து போவதற்குத் தடை விதித்ததாகவும் இல்லை. ஆகையினால் சிங்களச் செய்தியாளர்கள் கடந்த காலத்தில் வடபகுதிக்கு வராமைக்கு காரணம், தனியாக இராணுவம் விதித்த கட்டுப்பாடாக மட்டும் இருக்க முடியாது. அவர்களின் எதிர்பார்க்கைகளும் வேறாக இருந்தமையுமே காரணமாகும்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகியபோது வழமை போலவே சிங்களப் பத்திரிகைகள் -ஓரிரண்டு தவிர -இராணுவத்திற்கு ஆதரவாக பெரும் குரலெழுப்பின. இராணுவத் தளபதிகளை நாட்டின் கதாநாயகர்களாக உயர்த்த முனைந்தன. அத்தோடு இராணுவத்தரப்பின் செய்திகளையும் முழுமையாக நம்பின.

இந்நிலையில் தமிழீழத்தின் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பிழையான கற்பிதத்தையும், அவை சிங்கள மக்கள் மத்தியில் வளர்க்க முற்பட்டன. அதற்கென சிங்கள மக்களுக்கு உண்மைக்குப் புறம்பான, உணர்ச்சியூட்டக் கூடியதுமான தகவல்களையும் வழங்கி அவர்களை மாயை ஒன்றுக்குள் சிக்க வைத்தன.

ஆனால், இம் முயற்சியில் இப் பத்திரிகைகள் இறங்கிய போது தாமும் அதில் சிக்கிப் போனது தான் வேடிக்கையானதும் துயரமானதுமாகும். இறுதியில் சிங்கள மக்களினால் மட்டுமல்ல, இப்பத்திரிகைகளினால் கூட யதார்த்த நிலையை மதிப்பீடு செய்ய முடியாத நிலை உருவாகியது.

இந்நிலையில் வடக்கில் இருந்து செல்லும் சில செய்திகள் அவர்களுக்கு ஆச்சரியம் அளிப்பவையாகவும், பிரமிப்பூட்டுபவையாகவும் இருந்தன. அவர்கள் எதிர்பார்த்திராத செய்திகள் கிடைத்த போது அவர்கள் குழப்பம் அடைந்தனர். சிலவேளை ஆத்திரமும் கொண்டனர்.

இதற்கு சிங்கள, ஆங்கில பத்திரிகைகளில் எழுதிய இராணுவ - அரசியல் விமர்சர்களும் பெரும் பங்காற்றினர். அவர்கள் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான இராணுவவெற்றி ஒன்று இலகுவில் ஏற்பட்டுவிடக் கூடியது என்ற நிலையில் தமது விமர்சனங்களை முன்வைத்தனர். அவர்கள் விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் வேறாக்கி இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை எனச் சித்தரிக்கவும் முற்பட்டனர்.

இவ் வேளையில் 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட கணிசமான இழப்பைத் தொடர்ந்து இராணுவம் தனது பிரச்சாரத்தை முடுக்கிவிட்டது. விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் உள்ளனர் என பெரும் எடுப்பில் பிரசாரம் செய்தனர். சிங்கள செய்தியாளர்களும் ஆனையிறவு இராணுவ மீட்புடன் அதை முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.

இதற்கு ஆதரவாக இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளும் காரணமாக இருந்தன. தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு வங்காள விரிகுடாவிலும், பாக்கு நீரிணையிலும் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை இந்திய கடற்படை கட்டுப்படுத்த முனைந்தது. மேலும் இந்திய அரசும் -சிறீலங்கா அரசும் கூட்டாக தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இணைந்து செயற்பட முற்பட்டன. இந்தியாவின் தீவிர எதிர்ப்பாளராக இருந்த அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா இந்தியாவுக்கு நட்புக்கரம் நீட்டினார்.

இந்நிலையில் இராணுவ வெற்றி விரைவில் எட்டப்படும் என்ற சிங்களச் செய்தியாளர்களின் நம்பிக்கை மேலும் வலுப்பட்டது. இராணுவத் தரப்பு வழங்கிய செய்திகளும் அதற்கு ஆதாரமாக இருந்தன. இது சிங்களச் செய்தியாளர்கள் தாம் வளர்த்த மாயைக்குள் தாமே சிக்கிக் கொண்டதாகவே இருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், 1991 இல் ஒப்பரேசன் வலம்புரி மூலமும் ஒப்பரேசன் பலவேகய II மூலமும் யாழ் குடாநாடு இராணுவ முற்றுகைக்கு உள்ளாகிய போது தமிழ்த்தேசிய போராட்டமும் விடுதலைப் புலிகளும் தமது அந்திம காலத்தை நெருங்கிக் கொண்டதாகவே இப்பத்திரிகையாளர்கள் கற்பிதம் செய்து கொண்டார்கள். இராணுவத் தரப்பு தமது முற்றுகையை பெருமையாகப் பேசிக் கொண்ட போது, பத்திரிகையாளரும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயினர். விடுதலைப் புலிகளும் கழுத்து நெரிக்கப்படுகின்றதென்றும் போத்தல் ஒன்றில் புலிகள் அடைக்கப்பட்டுவிட்டனர் எனவும் விமர்சனம் செய்யப்பட்டது.

ஆனால் 1992 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த புதிய போர் யுக்தியானது, இராணுவத் தரப்பில் பெரும் சேதத்தை விளைவித்த போதும் இராணுவத் தரப்பின் வெற்றி குறித்துச் சிங்களச் செய்தியாளர்கள் சந்தேகம் கொண்டிருக்கவில்லை. இராணுவத் தலைமைப் பீடத்தில் உள்ள சில குறைபாடுகளே இராணுவத்தின் இழப்பிற்கு காரணம் என்ற ரீதியில் கற்பிதம் செய்து கொண்டதோடு, சில தளபதிகளுக்கு எதிராகவும் சில தளபதிகளுக்கு ஆதரவாகவும் மாறி மாறி எழுத முற்பட்டன.

> சிங்களச் செய்தியாளர்களின் வடக்கு நோக்கிய வருகை திடீரென அதிகரித்துள்ளது. இராணுவ வெற்றியில் அவர்கள் கொண்டிருந்த மாயை கலையத் தொடங்கியதே இதற்கான காரணமாகும். மூன்று வருடத்திற்கும் மேலான பொருளாதார. இராணுவ முற்றுகையின் பின்னும், தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் எவ்வாறு தாக்குப் பிடிக்கின்றார்கள், போரைத் தொடர்ந்து நடத்துகிறார்கள் என்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே இன்றும் உள்ளது.

ஆனால், 1992 ஆகஸ்ட் 8 ம் திகதி லெப் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவும், மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னவும் கொல்லப்பட்டமையானது சிறீலங்கா இராணுவத் தலைமைக்கு கொடுத்த அதிர்ச்சியை போன்றே சிங்களப் பத்திரிகையாளருக்கும் அதிர்ச்சி அளிக்கும் ஒன்றாகவும், அவர்களின் இராணுவ வெற்றி குறித்த கனவைக் கலைக்கும் அம்சமாகவும் இருந்தது. இதன் பிற்பாடு, இராணுவத் தரப்புச் செய்திகள் குறித்தும், இராணுவ வெற்றி குறித்தும் சில விமர்சனங்களையும் இவை முன்வைக்கத் தொடங்கியபோதும், இராணுவம் வெற்றி பெற வேண்டும் என்பதிலும், இராணுவத் தலைமையை சீர்செய்வதன் மூலம் புலிகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம், வெற்றி கொள்ளலாம் என்ற நிலையிலிருந்து அவர்கள் விடுபடவில்லை.

ஆனால், அதன் பின்னர் கட்டைக் காட்டிலும், மண்கிண்டி மலையிலும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பேரிழப்பானது செய்தியாளர்களின் நம்பிக்கைத் தன்மையை சிதறடிப்பதாகவே இருந்தன. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது அத்தனை இலகுவானது அல்ல என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி வந்தவேளை, ஒப்பரேசன் யாழ் தேவி இராணுவம் அடைந்த தோல்வி அதனை மேலும் உறுதிப்படுத்தியது.

இந்நிலையில்தான் எதிர்த்தரப்பு -அதாவது தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் எவ்வாறு இப்போரை எதிர்கொள்கின்றார்கள் என்பது பற்றி அறிந்து கொள்ள சிங்களப் பத்திரிகைகளும் செய்தியாளர்களும் ஆவல் கொண்டனர்.

அதாவது மூன்று வருடத்துக்கு மேற்பட்ட பொருளாதார முற்றுகை, இரண்டு வருடத்துக்கு மேற்பட்ட இராணுவ முற்றுகையும், கடற்பிராந்தியத்தில் இந்தியாவின் நெருக்குதல்கள் இவை யாவற்றையும் தாண்டி எவ்வாறு தமிழீழப் போராட்டம் உயிர் வாழ்கின்றது என்ற அதிசயத்தை அறிந்து கொள்வதே அவர்களின் குறிக்கோளாக மாறியது. அதாவது தமிழீழ விடுதலைப் போர் குறித்து ஒரு தரப்பு வழங்கிய தவறான தகவல்களை மட்டும் அறிந்து கொண்டவர்கள், அதற்கு மறுபக்கமும் உள்ளது என்பதை விளங்கிக் கொண்டனர். இதனை அறிந்த கொள்ள சிங்களச் செய்தியாளர்கள் முற்பட்டமையே அவர்களின் வடபகுதிப் படையெடுப்புக்குக் காரணமாகும்.

இவ் வடபகுதி விஜயத்தின் மூலம் சிங்களச் செய்தியாளர்கள், கடந்த காலத்தில் அவர்கள் உணரத் தவறிய சில யதார்த்தங்களைப் புரிந்து கொண்டிருக்க முடியும். அதில், தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பது ஒரு பயங்கரவாதப் போராட்டம் அல்ல; அது தேசிய இனத்தின் விடுதலை உணர்வின் எழுச்சி வடிவம் என்பதும், எனவே இது எந்த நெருக்கடியாலும் தோற்கடிக்கப்பட முடியாதது என்பதையும் புரிந்து கொண்டிருக்க முடியும். மேலும் போர் நடவடிக்கைகள் மூலம் இராணுவம் இதுவரை சாதித்தது என்ன என்பதையும் சுலபமாக விளங்கிக் கொண்டிருக்க முடியும்.

ஆனால், சிங்கள அரசியல்வாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இது எப்பவோ தெரியும். ஆனால், அவர்கள் உண்மையை சிங்கள மக்களுக்கு எப்போதுமே கூறவில்லை. பத்திரிகையாளர்களும் இதனைக் கணிசமாக அறிந்திருப்பினும், மக்களுக்கு அதனைத் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், பத்திரிகையாளர்கள் தற்போது முழுமையாக யுத்தத்தின் நிலையை அறிந்துள்ளார்கள். ஆனால் இனியாவது அவர்கள் உண்மைகளை வெளியிட முடியுமா? இதற்கு செய்தியாளர்கள் விரும்பினும், பத்திரிகை உரிமையாளர்கள் இடம் விடுவார்களா? இக் கேள்வியை நாம் எழுப்ப வேண்டிய அவசியமும் உண்டு. ஏனெனில் அண்மையில் யாழ் வந்து திரும்பிய செய்தியாளர்கள் சிலர் எமது செய்தியாளர்களிடம் பேசியபோது, 'இனவாதம் பேசாமல் தென் இலங்கையில் பத்திரிகைகளை நடத்த முடியாது' எனக் கூறியமையே இதற்கான காரணமாகும். ■

**• ஜெயராஜ்**
**தமிழீழம்**

---

### உலகத்தின் தலைசிறந்த...

தலைக்குனிவை மறைக்கும் எத்தனமாகும். இருந்தும் -பொதுமக்களிடையே குறைந்துவரும் நம்பிக்கையின் மத்தியிலும் சிறீலங்கா இராணுவம் நாட்டின் உள் அரசியல் மட்டத்தில் தொடர்ந்து ஒரு சக்தியாக இருக்கும் எனச் சொல்லிவிடலாம்.

தற்போதைக்கு சிறீலங்காப் படை தீராத நோய்க்கு இரையாகியுள்ளது. இந்திய இராணுவத்தை மீண்டும் அழைத்துவர வேண்டும் என்று சிறீலங்காப் பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் கூக்குரல் முரண்பாடான கேலிக்கூத்தாக இருக்கிறது. இந்தியாவின் அயல்நாட்டில் நடக்கும் உள்நாட்டு மோதலில் இந்தியா கவனமாக நடந்துகொள்ள வேண்டும். சிறீலங்கா இராணுவத்திற்கு இந்தியாவின் இராணுவப் பயிற்சியும், வேவு பரிவர்த்தனையும் தேவை. றோ (R A W) மற்றும் உளவு நிறுவனங்கள் மீண்டும் கடை விரித்துள்ளார்கள். இம்முறை இருசாராரும் நடத்தும் பேச்சு வார்த்தைகள் இரு தரப்பினருக்கும் இடையிலான பூட்டை உடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இலங்கைத் தீவில் வதியும் இரு இனத்தவர்களுக்கும் இடையிலான இடைவெளி அகன்றுகொண்டு போவதால் கிடைக்காமல் போகக்கூடும்.

ஒருபட்ச சுதந்திரப் பிரகடனத்தை அறிவிக்குமுன் கலைக்கப்பட்ட வட கிழக்கு மாகாண சபையின் ஒரே முதல் அமைச்சர் வரதராசப் பெருமாள் எனக்குச் சொன்னார், "தளபதியாரே, நீங்கள் நம்பிக்கை பற்றிக் கதைக்கிறீர்கள்? சிறீலங்கா அரசை நம்புவதா? நீங்கள் கொஞ்சம் எங்கள் தேசியக் கொடியின் வடிவமைப்பைப் பாருங்கள். சம கோடுகளில் காலில் வாளேந்திய வண்ணம் நிற்கும் சிங்கம் கொடியின் முகத் தலைப்பில் இருக்கும் தமிழருக்குரிய செங்குத்தான கோடுகளில் பாய்வதற்கு ஆயத்தமாக நிற்கிறது."

இப்படியான அவமதிப்பும், ஆத்திரமுட்டல்களுமே பூநகரிகளை உற்பத்தி செய்துள்ளது. ■

(நன்றி: உலகத்தமிழர்)

---

**பதிலடி**

விதி வெடிக்கும்
மரம் வெடிக்கும்
நின் பாதம்
படும் இடமெல்லாம்
வெடிக்கும்:
எம்மக்கள்
அனுமதியின்றி
வருவோர் விதி
முடிக்கும்
இவை.....
ஈழம் கொடுக்கும்
பதிலடிகள்

—தூயவன்

# ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க அரசாங்கத்தால் யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 1994

**1994**ஆம் ஆண்டு சிறீலங்காவில் தேர்தல் ஆண்டாக அமையும் அதேவேளை, தமிழீழத்தில் இது ஒரு யுத்த ஆண்டாக அமையும் என்பதே இராணுவ, அரசியல் விமர்சகர்களின் கணிப்பீடாகும். இக்கணிப்பீட்டை உறுதிப்படுத்துமாப் போன்றே சிறீலங்கா அரசியல், இராணுவ வட்டாரங்களின் நடவடிக்கைகளும் உள்ளன.

கடந்த ஆண்டு சிறீலங்கா இராணுவத்திற்குப் பெருத்த துயர் மிகுந்த ஆண்டு என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. அவ்வாண்டில் சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பு விடுதலைப்புலிகளால் உருக்குலைக்கப்பட்டதென்றால் மிகையாகாது. இதன் விளைவாக, ஆண்டின் முடிவில், யுத்தம் ஒரு புதிய பரிணாமத்தை எட்டியிருந்தது.

கடந்த ஆண்டில், விடுதலைப் புலிகள் இயக்கம் இருமுனைகளில் யுத்தத்தை நகர்த்தியிருந்தார்கள். இதில் ஒன்று ரோந்து அணிகள், தொடர் காவலரண்கள் என்பனவற்றைத் தாக்கி அழிப்பதில் இருந்து, பெரும் முகாம்களை நிர்மூலமாக்கும் பெரும் தாக்குதலுக்குச் சென்றிருந்தது. இதில் விடுதலைப் புலிகள் பெயரிட்டு நடாத்திய இருதாக்குதல்களுமே அவர்களுக்குப் பெரு வெற்றியைத் தேடிக் கொடுத்திருந்தன. இதில் முதலாவது தாக்குதல் 'இதயபூமி -1' இராணுவக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியதென்றால், இரண்டாவது தாக்குதல் 'ஒப்பரேசன் தவளை' இராணுவத் தளபதியை பதவி விலகச் செய்ததெனலாம்.

இரண்டாவது முனையாக கடற்புலிகள் தமது தாக்குதல்களை அதிகரித்தார்கள். விடுதலைப் புலிகளைப் பொறுத்து இவ்வாண்டைக் 'கடற்புலிகளின் ஆண்டு' எனக்கூறும் அளவிற்கு கடற்புலிகளின் வளர்ச்சி இருந்தது. சிறீலங்காவின் கடற்படை வரலாற்றில் ஒரு தளத்தை இவ்வாண்டிலேயே கடற்படை இழந்தது. அதேவேளை பெருமளவு கடற்படையினரையும் பறிகொடுத்திருந்தது.

ஆனால் இவை எவ்வாறு இருப்பினும் கடந்த ஆண்டிற்கான போரை யாழ். கடல் நீரேரிக்கான போர் என்றே கொள்ளமுடியும். ஏனெனில் போரின் மையம் யாழ். கடல் நீரேரியையே கொண்டிருந்தது. கடந்த ஆண்டில் இடம்பெற்ற இருபெரும் சமர்களில் 'ஒப்பரேசன் யாழ்தேவி' கடல்நீரேரியின் வடகிழக்கிலும், 'ஒப்பரேசன் தவளை' கடல்நீரேரியின் தெற்கு -தென் மேற்கிலும் இடம்பெற்றதில் இருந்தே புரிந்துகொள்ளமுடியும்.

இறுதியாக சென்ற வருடமுடிவில் போரின் மையமான யாழ். கடல் நீரேரி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்தது. அத்தோடு, விடுதலைப்புலிகளின் ஆயுத பலமும் கணிசமான அளவில் உயர்ந்தது. இதேவேளை சிறீலங்காவின் இராணுவக் கட்டமைப்பானது உருக்குலைந்து பல மாற்றங்களை எதிர்பார்த்து மிகவும் பலவீனமான நிலையை அடைந்தது. இதன் உச்சக்கட்டமாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவின் பதவி விலகல் இருந்தது. (ஒருவகையில் பதவிநீக்கம் என்றே கொள்ளலாம்.) இந்த நிலையில் இராணுவ கட்டமைப்பு மாற்றம், யுத்ததந்திரோபாய மாற்றம் என்பவற்றை சிறீலங்கா இராணுவம் வேண்டி நிற்கின்றதெனலாம்.

ஆனால் இவை எவ்வாறு இருப்பினும், சிறீலங்கா அரசாங்கம் குறிப்பாக டி. பி. விஜேதுங்க , இவ்வருட முற்பகுதிக்குள் இராணுவம் துரிதகதியில் வெற்றிகளை ஈட்டவேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். பெப் 4 -ஆம் திகதிக்குமுன் குடாநாடு மீதான தாக்குதல் திட்டம் தமது கையில் ஒப்படைக்கப்படவேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

தேர்தல் ஆண்டில் பெரும் இராணுவ வெற்றி ஒன்று அதன் தேர்தல் வெற்றிக்கு அவசியமாக இருப்பதே காரணமாகும். இதேவேளை, இராணுவத்தலைமைக்கும், தமது இழந்த கௌரவத்தை மீள நிலை நாட்டிக்கொள்ளவதற்கு ஒரு பெரும் வெற்றி அவசியம் என்ற நிலையில், போருக்கான முழு முயற்சியில் இராணுவத் தலைமை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இராணுவத் தலைமை இம்முயற்சியில் முக்கிய பணியாக இரு அம்சங்களில் தீவிர கவனம் செலுத்துகின்றது. தோல்வியினால் மனச்சோர்வுற்ற இராணுவத்திற்குத் தென்பூட்டுவதும், இராணுவக் கட்டமைப்பை மாற்றியமைப்பதுமாக உள்ளது. இதன் ஒரு படியாக இராணுவத்திற்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுக்கத்தக்க வகையில் நவீன இராணுவத் தளபாடக் கொள்வனவில் இராணுவத் தலைமை அக்கறை காட்டுகின்றது. இதன் மூலம் இராணுவத்திற்கு உற்சாகமும், நம்பிக்கையும் ஊட்ட முற்படுகின்றது.

இதேவேளை, இராணுவத்தினரின் சேமநலன்களைக் கவனிப்பதிலும் பெரிதும் கரிசனை செலுத்தத் தொடங்கியுள்ளது. இம்முயற்சியில், அரசியல்வாதிகளினதும், கொடை வள்ளல்களினதும் ஒத்துழைப்புப் பெறப்பட்டு வருகின்றது.

மேலும், இராணுவ உயர் அதிகாரிகள் இராணுவக் கட்டமைப்பில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றியும் வலியுறுத்தி வருகின்றனர். புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ள லெப். ஜெரி டி சில்வா இரு தினங்களில் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இராணுவக் கட்டமைப்பு மாற்றத்தின் அவசியம் பற்றியும் பேசியுள்ளார்.

இக் கட்டமைப்பு மாற்றத்தில், களத்தில் நிற்கும் அதிகாரிகள் சுயமாகத் தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது முக்கியமாக வலியுறுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. களம் செல்லும் அதிகாரிகளுக்கே பதவி உயர்வு என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ள சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் கோட்பாட்டிற்கு இது பெரும்பாலும் பொருத்தப்பாடாக இருப்பினும், இதுவரை இராணுவத்தினரின் கைகளில் இருந்த கனிஸ்ட அதிகாரிகளின் பதவியுயர்வு உட்பட இராணுவ உயர்மட்ட அதிகாரங்கள் சிலவற்றைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ள ஜனாதிபதியின் முடிவு, இதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவே உள்ளது.

அதேவேளை, ஐந்து பிரிகேடியர்களை மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தியுள்ளமையும், மேலும் பலர் பிரிகேடியர்களாக உயர்த்தப்பட்டமையும் பதவிகளில் தோன்றியுள்ள வெற்றிடங்களை நிவர்த்தி செய்து, இராணுவக் கட்டமைப்பைச் சீர்செய்யும் நடவடிக்கையில் டி. பி. விஜயதுங்கா விழிப்பாக இருப்பதையே காட்டுகின்றது.

இவ்வாறான இராணுவப் புனரமைப்பு ஒருபுறம் இருக்க முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவின் பதவி விலகலானது, சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடத்திற்குள் இருந்த முரண்பாடுகளைக் கணிசமான அளவில் குறைக்கும் என்றே கூறமுடியும். அத்தோடு, இராணுவத்திற்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது, அரசியல் மட்டத்திலும் இராணுவ மட்டத்திலும் நெருக்கமான உறவினை

**-ஜெயராஜ்-**
**தமிழீழம்**

வளர்க்க வாய்ப்பாக இருக்கலாம்.

ஏனெனில், முன்னாள் தளபதி சிசில் வைத்தியரட்னாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வனசிங்காவுக்கும் இடையில் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய காலத்தில் இருந்தே முரண்பாடுகள் இருந்து வந்தமை வெளிப்படையானது. இருவரும் போட்டியாளர்களாகவே செயற்பட்டனர். இது இராணுவத்தில் போட்டிக் குழுக்களையே உருவாக்கியிருந்தன.



ஜெரி டி சில்வா

ஆனால், தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வனசிங்காவுக்கும் இடையில் பரஸ்பரம் நல்லுறவு நிலவுவதினால், முரண்பாடுகள் குறைவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. சிசில் வைத்தியரட்ன இராணுவத் தளபதியாக இருக்கும் வரை, பெரிதாக வெளியில் எதையும் பேசாது இருந்த பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமில்டன் வனசிங்க, தற்பொழுது இராணுவம் பற்றிப் வெளிப்படையாகப் பேச முற்பட்டுள்ளமையானது, ஜெரி டி சில்வாவுடன் அவருக்குள்ள நெருக்கத்தையே காட்டுவதாக உள்ளது.

ஆயினும், முற்றாக முரண்பாடுகள் களையப்பட்டுவிட்டதாகவும் கொள்ள முடியாது. இராணுவத்தின் பிரதம நிர்வாக அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, முன்னாள் இராணுவத் தளபதிக்கு நெருக்கமானவர் என்ற நிலையில், முரண்பாடுகள் முற்றாகக் களையப்பட்டதாகவும் இல்லை. இதற்கு மேலும் ஒரு உதாரணமாக முன்னாள் இராணுவத் தளபதி சிபார்சு செய்த எட்டுப் பிரிகேடியர்களின் பதவி உயர்வுகளை ஜனாதிபதி ரத்துச் செய்துள்ளமையையும் சுட்டிக் காட்டத் தக்கவையாகும்.

ஆனால், இம்முரண்பாடுகள் யாவற்றிற்கும் மேலாக யுத்தம் குறித்து அரசியல் தலைமையும், இராணுவத் தலைமையும் கூட்டாகச் சிந்திப்பதனால் யுத்தம் என்பது இவ்வாண்டில் தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம். சில தினங்களுக்கு முன் வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவருக்குப் பேட்டியளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமில்டன் வனசிங்க, "யுத்தமே எமது இறுதி முடிவு. நாம் யுத்தத்திற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். இதனை எமது ஜனாதிபதி சகலருக்கும் தெளிவாகக் கூறியுள்ளார்" எனத் தெரிவித்துள்ளதில் இருந்தே, இவ் ஆண்டில் தமிழீழத்தில் பெரும் யுத்தங்கள் இடம்பெறலாம் எனக்கூறுவதில் தவறில்லை.

ஆனால், மேற்கூறப்பட்ட முயற்சிகள் யாவும் யுத்தத்தில் விடுதலைப் புலிகளை வெற்றி பெறவும், தமிழர் தேசிய இன போராட்டத்தை இராணுவ ரீதியில் எந்தளவுக்கு வெற்றி பெறவும் உதவ முடியும்?

சிறீலங்கா இராணுவம் கடந்த பத்து வருட காலத்தில் குறிப்பாக இரண்டாம் கட்ட ஈழப்போரில் கணிசமான சக்தி வாய்ந்த ஆயுதத் தளபாடங்களை போர் முனையில் பயன்படுத்தியுள்ளது. இதில் சக்தி வாய்ந்த டாங்கிகள், குண்டு வீச்சு விமானங்கள், பீரங்கிப் படகுகள் எனப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. இவை யாவும் போர் வெற்றிக்கு கணிசமாக உதவும் என்றே கருதப்பட்டது.

ஆயினும் போர் முனையில் அவை திறம்படச் செயற்பட்ட போதிலும் எதிர்பார்த்த வெற்றியை இராணுவத்திற்கு ஈட்டிக் கொடுக்கத் தவறிவிட்டன. மாறாக 'கவுண்ட பொயின்ற்' சஞ்சகையில் குறிப்பிட்டதைப் போல "யுத்த டாங்கிகளின் அறிமுகமானது படையினர் மத்தியில் தவறான அபிப்பிராயத்தையே தோற்றுவித்திருந்தது. இதனால் 'ஒப்பரேசன் யாழ்தேவி'யின் போது டாங்கிகள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டபோது படையினர் பதற்றமே அடைந்தனர். அதாவது இராணுவத்தின் மனத்தளர்ச்சிக்கே அவை உதவின.

இதேபோன்றே சுப்பர் டோறா படகு பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டபோது கடற்படையினரின் நிலையும் இருந்தது. இப்படகு எவ்வாறு கடற்புலிகளால் வழிமறிக்கப்பட்டது என்பது அவர்களுக்கு இன்னமும் ஆச்சரியமானதாகவே உள்ளது.


இந்நிலையில் புதிய தளபாடக் கொள்வனவும், யுத்தத்தில் வெற்றி பெற எந்தளவுக்கு இராணுவத்துக்கு மனவுறுதியைக் கொடுக்க முடியும் என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கும்.

மேலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் நீண்ட காலமாகத் தலைமை தாங்கிய கமில்டன் வனசிங்காவும், இரண்டாம் கட்ட ஈழப்போரில் மூன்றாவது நபராக இராணுவத் தளபதிப் பதவியைப் பொறுப்பேற்றுள்ள ஜெரி டி சில்வாவும், புதிதாக வகுக்கப்போகும் போர்த் தந்திரோபாயங்கள், எத்துணை புதிய யுக்திகளைக் காட்ட முடியும் என்பதில் சந்தேகங்கள் உண்டு. இவ்விருவருமே ஈழப்போரின் ஆரம்பம் முதல் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் முனையில் செயற்பட்டவர்கள். ஆனால் இவர்களால் கடந்த காலத்தில் வெற்றியை ஈட்டிக் கொடுக்க முடியவில்லை. இன்று போரின் பரிணாமமே மாறியுள்ள நிலையில் மீண்டும் அவர்களால் எத்தகைய திறம்பட்ட செயற்பாட்டைக் காட்ட முடியும்?

அதாவது, இன்று சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் மரபு வழிப்போர் முறையற்ற ஆனால், மரபு வழிப்போர் முறைக்குச் சமமான பாரிய தாக்குதல்களை எதிர்கொள்கின்றது. இந்நிலையில், புலிகளின் இவ் யுக்தியை ஈடுகட்டக்கூடிய புதிய போர் யுக்தியை வகுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இராணுவத் தளபதிகள் உள்ளனர். ஆனால், புலிகளின் கடந்த காலப் போர் யுக்திகளை சமாளிக்க முடியாத இத்தளபதிகளால் புலிகளின் புதிய யுக்திகளைச் சமாளிக்க முடியுமா என்பதே கேள்வியாகும்?

மேலும், 1994 இல் இடம்பெறும் படையெடுப்புக்கள் மீதான புலிகளின் எதிர்த் தாக்குதல்கள் மற்றும் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் என்பன மிகவும் கடினமானதாகவும், புதிய போர் யுக்திகைளக் கொண்டதாகவுமே இருக்கும் எனத் துணிந்து கூறலாம். இதனால், இராணுவம் எதிர்கொள்ள வேண்டிய இழப்புக்களும் அதிகமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இவற்றை அரசாங்கமும் இராணுவத் தலைமையும் புரிந்து கொள்ளாமலும் இல்லை. இருப்பினும், சிறீலங்கா அரசு 1994 ஆம் ஆண்டை ஓர் போர் ஆண்டாக எதிர்கொள்ள விரும்புவதாகவே தெரிகிறது. இதில் சிறீலங்கா அரசின் பேரினவாதச் சிந்தனையா? ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வியூகமா? ஏதாவது ஒன்று அல்லது இரண்டும் காரணமாகவும் இருக்கலாம். ஆனால் இவ்வாண்டில் சிறீலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வுக்கு மேற்கொள்ளும் முயற்சியானது, இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியல் தீர்வு என்பதையே, கண்ணுக்கு எட்டாத தொலைவுக்கு விரட்டிவிடும். ஏனெனில், மக்களுக்கு பேரழிவு ஏற்படுமானால் சமாதானப் பேச்சுக்கே இடமில்லை என்பதில் விடுதலைப் புலிகள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது தெரிகிறது. அத்தோடு கடந்தகால அனுபவமும் புலிகள் இராணுவ மிரட்டல்களுக்கு எப்போதும் பணிவதில்லை என்தைக் காட்டுகிறது. ■






**இது ஒரு புதிய போர்ப்பரணி !**
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களி லும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக் காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கி சமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

## அத்தியாயம் - 4 இன் தொடர்ச்சி

"இங்கால இரண்டு செற்றப் பண் ணோணும் வடிவா இடத்தைப் பார்த்துச் செய்வம்"என்றேன். ஒழுங்கையை விட்டு ஒரு வீட் டின் வழியாக இறங்கி, வளவு களைக் கடந்து போனோம். எனக்கொரு செருப்பு அகப்பட்ட தால் ஓரளவு தாக்குப் பிடிக்கக் கூடியதாய் இருந்தது. சிறிய பனங்கூடலைக் கடந்து, அப் பால் நிமிர்ந்து நின்றிருந்த எமது அரணைப் பார்த்தோம். காவலர ணில் நின்ற போராளியுடன் ஒவ் வொரு அரணூடாகவும் பார்க்க ஆரம்பித்தோம்.

"இந்த பொயின்ற்தான் ஆமியில் இருந்து கனதூரத்தில இருக் குது. முன்னால ஒரே வெளி. குண்டடியால் முன்னுக்கு அடிச் சால் பொம்மர் அடிப்பானென்று பின்னுக்கு இழுத்திருக்கிறம்" - ஜீவன் கூறினார்.

"இந்தப் பொயின்ரில நின்று பார்த்தாத்தான் மடத்தின்ர றோட்டு சைற்பக்கமும் முல் லைத்தீவு றோட்டில இருக்கிற வீடுகள், கட்டடங்கள் எல்லாம் வடிவாய்த் தெரியுது". எங்களைப் பார்த்தார் ஜீவன்.

"ஓமோம், பிள்ளையார் கோயிலோ? அதுவும் வடிவாய் தெரியுது. இந்தப்பக்க பொயின் றுகள் நல்ல ரைற்போல, நீட் டுக்கு பொயின்ற் அடிச்சிருக்கி றான். சப்ளை மூவிங் பங்கரும் இருக்குமென்று நினைக்கிறன்" என்றேன்.

"ஓமோம் இந்த மடமும் கோயில் பொயின்றும்தான் அவன்ர உயிர். அதனால் எல்லா செற்றப்பும் இருக்கும். அதைவிட பொயின் ரில இருந்து இதுவரைக்கும் ஒரே வெளிதானே. மைன்சும் எக்கச்சக்கமாய் வைச்சிருப் பான். இந்தப் புறமாக இறங்கும் தாக்குதல் அணிகள் மிகவும் எதிர்ப்பைச் சந்திக்க நேரும். வெளியாக இருப்பதாலும் இரா ணுவத்தின் பெரியபார்வை இந் தப்புறமாக இருப்பதாலும், ஏராளமான துப்பாக்கிச் சூடு களை வெளியில் பெறவேண்டி யிருக்கும். அத்துடன் இனம் காண முடியாத மிதிவெடிகள் பெரும் பிரச்சினைக்குரியவை. இதற்கும் மேலாக விமானத் தாக்குதல் முற்று முழுதாக இப் பகுதியில் தான் இடம்பெறும் சந் தர்ப்பமும் அதிகம், இழப்புகள் ஏற்படும் வாய்ப்பும் அதிகம்.

ஆயினும் இராணுவ முகாமை கைப்பற்றுவதாயின் அது பிர தானமாக தங்கியிருக்கும் கோயில், மட காவலரண்களை வீழ்த்திய பின்னர் தான் வான் வெளி விநியோகத்தை தடுத்து இராணுவத்தை முற்றுகைக்குள் அமிழ்த்த முடியும். என்ன உயிர் விலைகளைக் கொடுத்தும் இப் பகுதியை நிச்சயமாக கைப்பற்ற வேண்டும். இதுவே சண்டையை தீர்மானிக்கும் என எண்ணிக் கொண்டேன். விநியோகப் பாதையை துண்டிப்பதில் பீரங் கிகள் முக்கிய பங்காற்ற வேண் டும் என தீர்மானித்துக் கொண் டேன். லக்சபானா மின்சாரத் தூண்கள் எம்மைக் கடந்து எதி ரியூடாக சென்று சின்னச் சின் னதாய் புள்ளியாய் தூரத்தே மறைந்து போயின.

"இங்கிருந்து ஏழெட்டு தூண்கள் வரையும் இருக்கிறான்". ஜீவன் சொன்னார். காவலரணிலிருந்து வீதிக்கு குறுக்கான காவலரணை நோக்கி பதுங்கியபடி ஓடிச்சென் றோம். அங்கிருந்து சினைப்பண் ணுவான். உந்தச் சாக்கைப் பாருங்கோ. எத்தனை ஓட்டை யள்! சாக்கு அரிதட்டுப்போல தொங்கியது. இங்கிருந்து பார்க்க கோயில் பொயின்ற் வடிவாய் தெரியும். ஒவ்வொருதராய் எட் டிப் பார்த்தபின் நான் ஏறிப்பார்த் தேன்.

'ரொய்ங் படாச்' தலைக்கு சாண் மேலாக வந்த டம்டம் ரவை மண் மூடையில் பட்டு வெடித் தது. ஆமை ஓட்டுக்குள் தலையை இழுப்பதுபோல உள் ளுக்குள் இழுத்துக் கொண்டு இறங்கினேன். என்னையறியா மலே கை தலைப் பகுதியைத் தொட்டுப் பார்த்தது. "பொட்டு வைச்சிருப்பான், தப்பிட்டியள்" இப்படி ஜீவன் கூற சிரித்துக்கொ ண்டேன்.

ஏதாவது பிரச்சினையா என்ற வோக்கி குரலுக்கு இல்லையென பதில் கூறிவிட்டு அப்பால் நேர் வீதி வழியாக பின்னே பதுங்கி ஓடினோம். ஏறத்தாழ 50 ஆண் கள் நின்று மண்மூடை கட்டிக் கொண்டும் பதுங்குகுழிகளை அமைத்துக்கொண்டும் இருந்தார் கள்.

"ஆர் இவர்கள்?"

"இங்க வேலை செய்து தாற துக்கு ஒவ்வொரு கிராமத்தில இருந்தும் 50 பேர் ஒவ்வொரு நாளும் வாறவையள். இவர்கள் முத்தையன்கட்டு ஆட்கள்". சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். "மார்க்க ண்டு சாக்கைப் பிடி" -"இன் னொரு மூடையையும் வை. நான் தூக்குவன்". "இந்த அகலம் காணுமோ இல்லை அகட் டவோ?" "இங்க கொண்டா தம்பி மண்வெட்டியை", என்ற குரல் கள் உற்சாகமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

முகாமின் வேட்டுச் சத்தங்க ளையோ, செல் குண்டுக ளையோ பொருட்படுத்த வில்லை. மதகில் இருந்த எனக்கு அருகில் பதுங்கு குழியை வெட்டி முடித்த வய தான மனிதர் வேட்டியை கையால் உதறிவிட்டபடி வந்து அமர்ந்தார். என்னவோ அவரு டன் கதைக்க வேண்டும் போல் உணர்வு.

"ஐயா முத்தையன் கட்டில என்ன செய்கிறியள்?"

"நானொரு பென்சன் ரீச்சர் தம்பி. முள்ளிவாய்க்காலில கெட் மாஸ்டராய் இருந்தனான். றிட் டயர் பண்ணிய பிறகு அமைதியா இருக்கிறதுக்காக முத்தையன் கட்டு வந்திட்டன். நல்ல சுவாத் தியமான இடம்; ஆஸ்பத்திரிக்கு பக்கத்திலதான் இருக்கிறன். ஐந்து வருடத்துக்கு முந்தி வாங் கின வீடு. பிரச்சினையில்லை".

தண்ணீர்க்கானை எடுத்துக் கொடுக்க இரு மிடறு குடித்த பின் "சந்தோசம்" என்று சொல் லித் தந்தார். என்னென்று கதையைத் தொடர்வதென எண் ணியபடி கேட்டேன்.

"ஐயாவுக்கு எத்தனை பிள்ளை கள்?"

"எனக்கு இரண்டு பிள்ளைகள். மூத்த பெடியன் மொறட்டுவ எஞ் சினியறிங் படிச்சவன். மூன்றாம் வருடம் படிக்கேக்க லீவில இங்க வந்திருக்கிறான், பிள்ளை. அவங்கள் மதவாச்சி யில வைச்சு இறக்கி வெட்டிப் போட்டான்கள். எளிய சாதியள். மற்றப் பெண்பிள்ளை யாழ்ப்பா ணத்தில பி. எஸ். சி. படிக்குது". "அப்ப உங்களுக்கும் அநியாயம் செய்திருக்கிறான்கள்?"

"அவன்கள் தமிழராய்ப் பிறந்த ஆருக்குத்தான் அநியாயம் செய் யேல்லை? அவன்கள் எங்களை அழிக்கப் பிறந்த சாதியள் தம்பி. பிறகு இவன் இந்தியன் ஆமி வந்து வீட்டுக்க கிடக்கிற சாமான் சக்கட்டுகளை எரிச்சு சாம்பலாக்கிப் போட்டான். பாடையில போவான். இவன்கள் இருக்கும்வரை ஒருநாளும் நிம் மதியாய் இருக்கேலாது". அலுத் துக் கொண்டார் அவர்.

"அதுசரி, என்ன மாதிரி இந்த மாவீரர் தினம்? ஏதாவது வெளிக் கிட்டுக் கிளிக்கிட்டு குழப்பப் பார்ப்பானோ?" என்று தொடர்ந் தார்.

"வெளிக்கிடப் பார்த்தாலும் விடமாட்டம்" என்று புன்னகைத் தேன்.

"நான் இப்பக் கிட்டடியில கொழும்புக்கு போகேல்ல. ஒரு 83, 84 களில போகேக்க பார்க் கோனும் அவங்கட திமிர. தமி ழன் என்று தெரிஞ்சாப் போதும் விளையாட்டுப் பொம்மை போல பொம்பளைகளை, பிள்ளை களை, வயது போனதுகளை பாராமல் இறக்கி நடப்பிப்பான், வெருட்டுவான், சேட்டையெல் லாம் விடுவான். சில நேரம் காறிக்கூடத் துப்புவான்ராப்பா. பெல்லையடிச்சு காட்டுப் பக்கத் தில இறக்கி விட்டிடுவான். சிங் களவர்கள், சிங்களத்தியர் எல் லாம் சிரிப்பாங்கள். சீ, கிளிச கெட்ட வாழ்க்கையடா தம்பி அது. இப்ப விளங்கும் தமிழரை ஆரென்று!"

"ஐயா, அப்ப நான் போட்டு வரப்போறன்".

"அங்கால வந்தா வீட்டுப்பக்கம் வா தம்பி".

மண்வெட்டியை தூக்கியபடி செல் வது, திரும்பிப் பார்த்த எனக்கு தெரிந்தது. அன்னியனின் அழுக் குப் பாதங்கள் நசுக்காத உள்ளங் களே இல்லைப் போலும் என எண்ணியபடி நடந்தேன், தோழர்களுடன். மெல்லிய நில வொளி படர ஆரம்பித்தது. நேரம் 8.15 தேய்பிறை ஆரம் பித்து விட்டதை உணர்ந்தேன்.

காலை, முகாமைச் சூழவுள்ள இலக்குகள் யாவும் சரியான முறையில் தெரிவு செய்யப்பட்ட மையால் மாங்குளத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு பல மைல் தூரம் கடந்து செல்லத் தயாரானோம். எல்வ் வாகனம் காற்றை கிழித்தவண்ணம் பறந் தது.

"இதுதான்ராப்பா பழைய கொக் காவில் முகாம். இந்த சண்டை தொடங்கினவுடனே அடிச்சனாங் கள். கிட்டத்தட்ட 100 ஆமி இறந்திருப்பான்கள். வீடியோ கொப்பி பார்த்தனிதானே?" என் றேன்.

"அதில இடங்கள் கிளியராத் தெரியல்ல". சலாம் முகாம் கடக் கும் வரை திரும்பிப் பார்த்தான்.

"எத்தனை நாள் சண்டை நடந் தது?"

"இரண்டு நாளிலை அடிச் சாச்சு".

"உந்த காம்பில இருந்த ஆமி சண்டை தொடங்கின அன்று வந்த பஸ்சை மறிச்சு கொள் ளையடிச்சிட்டு, நல்ல அடியும் போட்டுத்தான் அனுப்பினவன். 84, 85 களில பேய் அட்டகாசம் மச்சான் இவன்கள். இதில இருந்த ரூபவாகினி ரி. வி. ரவ ருக்கு பாதுகாப்பென்றுதான் காம்ப் போட்டவங்கள். அந்த சந்திதான்... புத்துவெட்டுவான் சந்தி என்றால் பஸ், லொறிகா ரன்கள் எல்லாம் நடுங்குவான் கள். காட்டுமரத்தில எல்லாம் ஏறி இருப்பான்கள்".

ஆம் - அந்த மண் ஆக்கிரமிப் பாளரிடமிருந்து கைப்பற்றப்பட்டு சில நாட்கள்தான். அதனால் தானோ அவனது அழிவுச் சுவ டுகள் இன்னும் ஆறவில்லை. இடிந்த எதிரியின் இருக்கைகள் இன்னும் சுடுகாடாய் புகைகின் றன. இன்று நாம் சுதந்திரமாய் உலாவலாம். யாரும் எம்மை ஏன் இந்த நேரத்தில் போகி றாய்? யார் நீ? என அதட்டவும் மாட்டார்கள். எம்மை எம் சொத்தை அபகரிக்கவும் மாட் டார்கள். இதற்கு மேலாய், அங்கு வீசும் மாவீரர்களின் பெயர் களைத் தாங்கிய தென்றல் தென் பூட்டிய வண்ணமேயிருக்கும்.

"முந்தியடாப்பா முல்லைத்தீவி லிருந்து வெளிக்கிட்டா முல் லைத்தீவு, ஒட்டுசுட்டான், மாங் குளம், கொக்காவில், கிளி நொச்சி, ஆனையிறவு, நாவற் குழி என இறக்கி ஏற்றி சனங் களை பிச்சுத் தின்னுவான்கள். இப்ப கொஞ்சம் கொஞ்சமாய் கிளியர் பண்ணுறம்" என்று சலா மிடமும் இதயனிடமும் கூறிச் சிரித்தேன்.

## அத்தியாயம் - 5

கிளிநொச்சிக்கு அப்பால் எல்வ் காற்றுப் போய் நின்றுவி டவே ஒரு லொறியில் புறப்பட் டோம். நெடும் பயணத்தின் பின் பெரிய மாந்தோப்பில் இறங்கிக் கொண்டோம். சிராஜ் அண்ணா விற்கு வோக்கியில் தொடர்பைப் பெற அந்த வெளிப்புறத்திற்கு வருமாறு அழைத்தார். ரைக்ரர் ஒன்றில் பெட்டியைப் பூட்டியபடி மண் ஒழுங்கையால் விரைந் தோம். ஒழுங்கை மிக மோச மாக இருந்தது. பெரிய குழிக ளும் மேடும் நீர்த் தேக்கமுமாய் குலுக்கி எடுத்தது. ஒழுங்கை யின் குறுக்காக 40 அடி அகலத் தில் நீர், வாய்க்கால் போல, இல்லையில்லை நதிபோல ஓடிக்கொண்டிருந்தது. ரைபிள் களை நெஞ்சுக்குள் மறைத்துப் பிடிக்க, நீரையும் சேறையும் வாரி இறைத்தபடி ரைக்ரர் மறு கரை ஏறியது. சேறான ஒழுங் கையின் ஒரு புறமாக பரந்த வெளி. இடையிடையே பனை களையும் கிழட்டுப் பூவரசு மரங் களையும் கூடலான தில்லை மரப்பற்றைகளையும் கொண்ட தாய் பரந்து கிடந்தது. அதன் ஒரு முனையில் புள்ளிபுள்ளியாய் பலர் நின்றிருந்தார்கள். வோக் கியில் அறிவித்தபின் வேகமாய் அவ்விடத்தை நோக்கி எம் உழவு இயந்திரத்தை (ரைக்ரரை) செலுத்தினோம்.

"மச்சான் அந்த பூவரசுக்குள் கொண்டுபோய் விடு. வெளியான இடத்திலை விட்டா கெலி போறஇடம் கண்டா வீண்பிரச் சினை. கனக்க பொடியன்கள் நிற்கிறான்கள், கொழுவிடும்" என்றேன்.

அந்த இடத்தில் எம்முடன் காட் டிலிருந்து வந்து உடனே இங்கு வந்துவிட்ட டேவிட் அண்ணா, டாவின், சேரன் இவர்களுடன் வேறு பலரும் நின்றார்கள்.

"உங்கற்றா எங்கட மாமாவை" ஓடிச்சென்று அணைத்துக் கொண்டேன். ஆம், எங்களுடன் ஒன்றாய் இருந்து யாழ்ப்பாணத் தில் விசேட பயிற்சிகளை பயின்ற போராளிகள்தான் அவர் கள். அவர்களுடன் கோட்டைச் சண்டையில் ஈடுபட்ட எங்க ளைப் பின்னர் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதலிற்கு கூட்டிச்சென்று விட்டார்கள். தாக்குதலை முடித்து காட்டிலி ருந்து நாங்கள் வருகின்றோம். இவர்கள் கோட்டைச் சண் டையை முடித்துவிட்டு வருகின் றார்கள்.

வர்மன், யெல்சின், றஞ்சன், விக்டர், எல்லோரும் வந்திருந் தாங்கள். மகிழ்ச்சிப்பெருக்கில் ஒருவரையொருவர் தழுவிக்கொ ண்டோம்! பிரிந்தவர் கூடினால் கேட்கவும் வேண்டுமா என்ப தைப் போல்.

"என்ன மச்சான், நீலநிறத்தில கோல்சர் அடிச்சு ரைபிள் கட்டி யிருக்கிறாய்?"

கோட்டை சண்டை முடிய பானு அண்ணா தந்தவர்" -இது றஞ் சன்.

"கோல்சர் துணியில்லையென் றால் பச்சை கலரில துணி அனுப்பியிருப்பன்". றஞ்சனை சீண்டினேன்.

"நீங்களொன்றும் தரவேண்டாம்". -முதுகில் குத்தினான் மெலிதாய் றஞ்சன்! கொஞ்சம் உயர்ந்து சதை சேர்த்திருந்தான். கறுப் பாயும் இருந்தான். எல்லோரு டைய தலையிலும் காகம் கூடு கட்டும் போல. "எங்களுக்கு நேரமில்லையப்பா" வர்மன் கூறினான்.

சிறுவயதில் கொழும்பில் இருந்து பின் வளர்ந்து வேலை செய்து. பிறகுதான் யாழ். பூமியை மிதித் தவன். கட்டையாகவும், மஞ்சள் தோலுமாய் கையை வீசியபடி நடப்பவன். தலைமயிர் வழமை யாக அரை அங்குலத்தில் வெட் டுபவன். இன்று கூடையாய் வளர்த்திருந்தான்.

"யெல்சின் என்ன சோகத்தில?" அரைக்கண் தூக்கத்திலிருந்த வனைக் கிண்டினேன்.

"ஒன்றுமில்லை, நித்திரை தூக் கியடிக்குது". ஒரே நித்திரைச் சாமி இவனும் வர்மனும் போட் டிக்கு நித்திரை கொள்வார்கள். காலை 7.30, 8.00, 8.30 பின்னர் ஒருவாளி நீருடன் ஜலக்கிரீடை செய்யப்படுவார்கள். இருவருக் கும் இது வாரத்தில குறைந்தது இருமுறை. விக்டரைக் காட்டி ஐயர் என்னவாம் என்று வினவ, சிரித்தபடி அருகே வந்தான் விக் டர். கன்ன ஓரங்களில் பூஞ்சை யான சுருள் மயிர்கள் தாடியைப் போல அடர்த்தியற்று வளர்ந்தி ருக்க, கண்களை கண்ணாடி

தொடர்ச்சி 9ம் பக்கம்.....

# போர் உலா...

யால் மறைத்து, தலைமையிரால் நெற்றியை மறைத்து -கொஞ்சம் கொழுத்திருந்தான்.

"என்ன என்னைப் பற்றி ஏதோ கதைச்ச மாதிரி இருந்தது?"

"இல்லை இப்பவும் றோய் அண்ணரிட்ட அடிவாங்கிறவனோ? என்று கேட்டனான்".

வயிற்றுள் மெலிதாய் குத்த, அம்மா என்றேன்.

"றோயரோட எப்படிப் போகுது".

"பன்பலாய் போகுது, இடைக்கிடை முதுகு நோகுது". -இது விக்டர்.

மச்சான் அவற்றை கதையைக் கேட்டியே! நான் போய் கிட்ட நிற்க யாரென்று கேட்டார். புதுசா வந்தனானென்று சொல்ல, சும்மா அங்கால போடாப்பா உனக்கு விசயம் விளங்காது. பிறகு மிஸ் கிஸ்செண்டா எங்களுக்குத்தான் பிரச்சினை. இதுகளைப் பற்றித் தெரியாமல் கிட்ட வரக்கூடாது என்று கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாய் கலைத்துப் போட்டான்" என்றான் இதயன் சிரித்தபடி.

"ஆர் மச்சான் ஆள்? புதுசாய் வந்தவனோ?" ஒல்லியான உடம்புடன் வயோதிபரைப் போல நின்ற போராளியைக் காட்டி றஞ்சனிடம் கேட்டேன்.

"ஓ, நீங்கள் போனப்பிறகெல்லே வந்தவன்கள். இவன்தான் ராப்பா சிறி, கிழட்டுச்சிறி என்று கூப்பிடுவம்".

"அந்தப் பனங்குற்றியில குந்தியிருக்கிற பரதேசி ஆர்? பார், பனைக்கும் ஆளுக்கும் கொஞ்சம் கூட வித்தியாசமில்லை!"

கூறப்படுபவன் இன்னொருவனிற்கு கல்லால் எறிந்தபடி, பல்லைக் காட்டினான்!

"அவரோ? அவர்தான் எங்கட கராட்டி மாஸ்ரர், பேய்ப் பைம்பல்காய்! எந்த நேரமும் முஸ்பாத்திதான். இப்ப கல்லெறி வாங்கியவன் அழகையா. இவற்றை சோடி".

அவனொரு பெரிய கல்லை எடுக்க வாத்தியார் பனைக்குப் பின்னால் ஒளிந்தார். கிட்டக் கிட்டவர மறைவிலிருந்து வெளிப்பட்டு அருகே போய் கட்டிப்பிடித்தார்.

"விடுங்கோ மாஸ்ரர், விடுங்கோ!"

"எல்லாம் அன்பிலைதான்". திரும்ப அவன் கூற செல்லமாய் கன்னத்தில் தட்டினார். மறு கையால் எம்மைப் பார்த்து சேட் கொலரை உயர்த்தி விட்டபடி, இருவரும் தோளில் கைபோட்டு நடந்தனர்.

"பிறகென்ன நல்ல செற்தான். பைம்பலாய் போகும்" என்றேன்.

ஏதோ ஞாபகம் வந்ததாய், "மச்சான் எங்கட நாற்பதாம் நம்பர் எங்கையடா?" என வினவினேன்.

"அங்கை பார், அந்த பூவரசுக்குக் கீழே குந்தியிருக்குது" -வர்மன் காட்டினான்.

நாற்பதாம் நம்பர் ஏன் என்றால், ஒருநாள் நல்லெண்ணைக்குப் பதிலாக 40 ஆம் நம்பர் ஒயிலை முழுகுவதற்காக ஏராளமாகத் தப்பியபடி விறாந்தைக்கு வர, சிரித்தபடி இன்னொருவன் வர விசயம் தெரிந்து நாங்கள் அறுக்க, அன்றிலிருந்து நாற்பதாம் நம்பர் ஆனான். அவனது பெயர் சசிக்குமார் என்பதே. மேலும் பல அறிமுகமற்ற போராளிகள் வந்திருந்தார்கள்.

மதிய வெயில் வெளியில் எங்கும் சுட்டெரித்தபடி பரவிக்கிடந்தது. தூரத்தேயிருக்கும் இலக்குக் கம்பங்கள் வெயிலில் அலை அலையாய் தெரிந்தன. பூவரசுகள் எல்லாம் மழை காலத்துடன் செழித்து நின்றன. இன்னொரு புறம் போராளிகள் ஒவ்வொரு அணியாக பீரங்கிகளைப் பரீட்சிக்க ஆரம்பித்தனர். நாம் 'வோக்கி'யில் உடனுக்குடன் தகவலை அனுப்பினோம்.

"மச்சான் இது வெடிக்கிற செல்லடா, கவனம்" என்றேன்.

"இது உள்ளுக்குள்ள போனா எப்படி இருக்கும்?" -கண்ணைச் சிமிட்டினான் றஞ்சன்.

தொடர்ந்து ஒவ்வொன்றாய் பரீட்சித்துப் பார்க்க பிற்பகல் 5.30 ஆனது. "கெதியா அதிலை இரண்டு பொயின்ற் அடியுங்கோ டச் எடுப்பம்". சிராஜ் அண்ணா ஊக்கப்படுத்த, ஆறு மணிக்கு 125 மண்மூடைகளுடன் இரு அரண்கள் அமைக்கப்பட்டன.

ஒருபுறமாக வீடியோ எடுக்க சிராஜ் அண்ணா கத்தினார்: "அவன் ஆற்றாப்பா சறத்தோட அதிலை நிற்கிறது. இறங்கடா கீழே" என்று எரிந்து விழுந்தார். சொன்னதுதான் தாமதம், "டேய் மாடா இறங்கடா கீழே" என்று, அவனை இழுக்காத குறையாக இழுத்து இறக்கினான் வர்மன். அவன் பெருங்குரல் எடுத்து அவனைத் திட்ட சிராஜ் அண்ணா சிரித்தார். "ஆர் வரதனோ? சொல்வழி கேளான்" என்றார். வரதன் எடுத்த கல்லைப் போட்டுவிட்டு, நாக்கைக் கடித்தபடி, சாரத்தை ஒருகையால் பிடித்தவண்ணம் வெளியே வந்தான். புன்னகை பூத்தார் மாஸ்ரர். கரகோசம் எழுந்து அடங்க மீண்டும் வீடியோ படமாக்கப்பட்டது. அன்றுதான் முதல்முதலாக ஒரு அரிய நண்பனை, புன்னகை மன்னனைப் பெற்றுக்கொண்டேன். அவர் அறிமுகத்துடன் சிநேகிதமானார். வாழ்வில் என்றும் மறக்க முடியாது.

இரண்டு போலிக் காவலரண்களை நோக்கி எமது இலக்குகள் சரிசெய்யப்பட்டன. பின் அவை குறிதப்பாமல் தாக்கிச் சிதறடிக்கப்பட்டன. இருட்டியவேளையில் பெரும் மின்னல் கீற்றுப் போல் பளீச் என்று மின்னி ம்... ம்... என முழங்கியது. வீசப்பட்ட மண் எச்சங்கள் பலநூறு யார்களுக்கு அப்பாலும் இருந்து எடுக்கப்பட்டன.

"பயங்கரச் சாமான்தான்! பார் கிண்டியிருக்கிற கிடங்கை" -றஞ்சனுக்குக் கூறினார்.

"இது மாதிரித்தான்ரா கோட்டையிலும். உந்த அடியிலை தானே ஓடினவன். இருந்தாப் போல அடிப்பம். செய்யிறவேலையளை அப்படியே போட்டுட்டு ஓடிடுவான்கள். அடிச் சாக்காணும். அம்மே... அம்மே என்று பெரிசாய் சத்தம் போடுவான் பிறகு எரிசெல்களும் அடிக்க கெலிச்சுப் போனான். கடைசியாப் பார்க்கேக்க அவங்கள் ஒவ்வொருதரும் வெளியில வெளிக்கிடாமல் சின்னச் சின்னக் குகைகளுக்குள்ள இருந்து, அதுக்குள்ளதான் கெல்மற்றில சமைச்சுச் சாப்பிடுவான்கள். உள்ளுக்குள்ள எல்லாம் ஒரே செல் பான்தான். ஞாயமான சேதம்". றஞ்சனும் வர்மனும் மாறிமாறிக் கூறினார்கள்.

"அப்ப கோட்டையெல்லாம் பார்த்தனியள்?"

"ஒரு ரண்டு மூன்றுதரம் பார்த்திட்டம்".

"அப்ப நாங்கள் தான் இன்னும் பார்க்கல்லே. இந்தச் சண்டையில தப்பினா கட்டாயம் அங்கால வருவன்" என்றேன். நன்றாக இருட்டிவிட்டது. எமது வாகனத்தில் இரண்டு சேற்றினுள் சிக்கி விட்டதனால் நாங்கள் சிலர் அந்த வெளியில் தங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரவு 8.30 அளவில் சாப்பாடு வந்தது. நான், றஞ்சன், வர்மன், கராட்டி மாஸ்ரர், அழகையா இத்தனை பேருமாக பார்சல்களை விரித்து கறிப்பையை உடைத்து பகிர்ந்து தின்றோம். "டேய்! உனக்கு கொழுப்பு, வெறும் தண்ணியில விட்டுச் சாப்பிடு".

கராட்டி மாஸ்ரர் அழகையாவுக்கு வெறும் குழம்பை உற்ற, அவன் சிணுங்க, "சரி இந்தா" என அரைவாசியை விட்டபின்னர் தான் எடுத்துக் கொள்கிறார். "நல்ல சாப்பாடு சாப்பிட்டு கனநாள் உடம்பெல்லாம் மெலிந்துபோச்சு". மாஸ்ரர் உடம்பைப் பார்த்து நிற்க அழகையா சிறிய வாக்குக் கண்ணால் இழுத்துக் காட்டி, அசட்டுச் சிரிப்பொன்று சிரித்தான்.

"வாத்தியார், அஞ்சு பேர் இருக்கிறம் படுக்கிறதுக்கு; இரண்டு சாக்குத்தான் கிடக்குது. என்ன மாதிரி? இதிலும் சிறிது நேரம் உனக்கு எனக்கு என்ற பொய்ச்சண்டை. இதன்பின் சாக்கின் மேல் தலையணையை மறந்து, அடுக்கிய கட்டைகளாக வரிசையாகக் கிடந்தோம். நேரம் எவ்வளவு கழிந்ததோ தெரியாது. நிமிர்ந்து பார்க்கையில் மேலே வானம் விரிந்துகிடந்தது. சில விண்மீன்கள் அங்குமிங்குமாய் சிமிட்டியபடி இருந்தன. இடையிடையே இராப்பறவைகள் பறந்துகொண்டிருந்தன. பனிப்புகார். குளிர் காற்று உடலைச் சில்லிட வைத்தது. மடித்திருந்த கைமடிப்புகளை எடுத்துவிட்டுப் பூட்டிக்கொண்டு படுத்தேன்.

"என்ன மச்சான் கால்கை எல்லாம் விறைக்குது, ஊ... ஊ..." என்றார் வாத்தியார்!

"ஓம் மாஸ்ரர், சரியாய் குளிருது. இப்ப என்ன செய்யலாம்?" என்று இடையில் புகுந்து அழகு கேட்டான்.

"என்ன, அப்பனுக்கு குளிருதோ? ஒன்று செய்யன். அந்த சவளால மண்ணைத் தோண்டு -நான் உன்ர மூஞ்சியை மட்டும் வெளியில விட்டு தாட்டுவிடுறன்".

இப்படிக் கஸ்டங்களையெல்லாம் கேலியாக மாஸ்ரர் மாற்ற, அடக்க முடியாமல் நான் சிரித்துவிட, "போங்க மாஸ்ரர்" என்று திரும்பிப்படுத்தான் அழகு.

"இயக்கமென்றால் கஸ்ரப்படோணும், தெரியாதோ? குளிரில கிடக்கோணும், தண்ணிக்க நிற்கோணும். ரண்டு மூன்று நாளைக்கு சாப்பாடு கிடையாது, என்று தெரியாதே? மெத்தையில கம்பளி போர்த்துப் படுத்து முட்டைக் கோப்பியை பல்லுத் தீட்டாமல் குடிக்கலாம் என்றா நினைச்சனி?" என்று மேலும் கிண்டினார். அவன் அசையாமல் கிடந்தான்.

"இந்த தில்லைச்செடியின்ர பால் பொல்லாத சாமானடாப்பா உடம்பில பட்டா அப்பிடியே அவிஞ்சுபோடும்" என்று வாத்தியார் கூற, உம் என்று கண்மூடினேன். அதிகாலை பனிப்புகார் உறைந்துபோய் எம்மேல் படிந்து கிடந்தது. குறித்த தூரத்திற்குப் பால் ஆளையாள் அடையாளம் காணமுடியாத புகார், உடலைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்தோம். இளம் கதிர்கள் எம் உடல்களைக் குத்தி விறைப்பை விரட்ட ஆரம்பித்தன. புகாரும் மெதுவாகப் படிய ஆரம்பித்தது.

"பற்பொடி கிற்பொடி ஒன்றுமில்லை. உவங்களை எழுப்பிக் கொண்டு வாங்கோ. அந்த ஆற்றுப்பக்கம் போய் அலுவலைக் கவனிப்பம்" என்றார் மாஸ்ரர். கடமைகளை முடித்திட, அதே ஆற்றுநீரில் தயாரான பிளேன்ரீ உடலை சூடாக்கியது. 10.30 மணியளவில் எமது பரீட்சார்த்த வேலைகளை முடித்துவிட்டு, பரந்தவெளியை விட்டு கும்பலாய் வெளியேற ஆரம்பித்தோம். றஞ்சனும், வர்மனும், இதயனும் அடக்கமாய் அழகையாவுடன் சேர்த்து நாம் ஏழுபேராக, புதிய ஒரு திட்டமிடலை நடாத்தத் தொடங்கினோம்.

"நீ போய் மாஸ்ரரிட்டை ரைபிளை வாங்கு", அழகை ஏவினோம்.

"மாஸ்ரர் ரைபிளைத் தாங்கோவன், வைச்சிருக்கிறன்".

வாத்தியார் அவனை சந்தேகமாய்ப் பார்த்தார். சுடக்கிடப் போறானோ என்று எண்ணினார் போலும்!

உங்களுக்கு கைமூட்டு வலிக்கு தென்றனியள், தாங்கோவன் என்ற கிளிப்பிள்ளை பாடத்தை இவன் ஒப்புவிக்க, சிஸ்யனுக்கு என்னில இவ்வளவு கரிசனையோ என்பதைப் போன்ற வியப்புடன் பார்த்தபடி,




"உன்ர ஆசையை ஏன் கெடுப்பான். சும்மா ஆசையென்றாலும் பரவாயில்லை கடைசி ஆசையல்லோ! போகேக்க பெட்டியில தானே போறது" என்று கூறி ரைபிளை ஒப்படைத்தபின், "அழுகின்ற பொடியை நான்தான் பண்ணாகத்துக்கு கொண்டு போவன். பெரிய காரில ஏறி எனவுன்ஸ் பண்ணுவன்; வாயினுள் சோக மியூசிக்கை சிறிது இசைத்தபின், பண்ணாகத்தைச் சேர்ந்த வீரவேங்கை அழகையா, மாங்குளம் முகாம் தகர்ப்பில் எதிரியின் எறிகணை வீச்சுக்கு இலக்காகி வீரமரணமடைந்தார் இவர்...... " என்று ஏதோவெல்லாம் கூற அழகு மாஸ்ரரைக் கட்டிப்பிடிக்க முடிவடைந்தது.

"மாஸ்ரர் வாங்கோ பின் பெட்டியிலை இருப்போம்" எனக் கூறிய நான் கண்ணடிக்க எல்லோரும் ஏறிக்கொள்ள, பெட்டியின் வெளிவிளிம்பில் நான் அடுத்து வாத்தியார், அப்பால் றஞ்சன். மாஸ்ரருக்குப் பின்னால அழகையாவை இருத்தியிருந்தோம்.

"மாஸ்ரர், என்ன உடம்பெல்லாம் சுடுகிறமாதிரி இருக்குது?"

"ராத்திரி பனிக்கை படுத்தது ஒத்துக்கொள்ளல -ராத்திரி பெரிய ஆள்மாதிரி எனக்குச் சொல்லிப் போட்டு இப்ப தெரியுதோ பனியைப் பற்றி? ஆர் ஆழகோ, நீ சரியான கெட்டிக்காரன்! பனி கூடாதென்று சொன்னதுக்கு கைதரவேணும். ஒரு கதை சொல்லுறன் கேளன்".

"ஆரோ ஒரு ராசா வேட்டைக்கு போறதுக்குமுதல் கேட்டானாம் மந்திரியிட்ட, இன்றைக்கு மழை வருமோ என்று. 'சீ இன்றைக்கு வராது பயப்பிடாமல் போகலாம்' என்று சொல்ல அவற்றை பேச்சைக் கேட்டு ராசா வேட்டைக்குப் பரிவாரத்தோட போனாராம், அப்ப வழியில ஒருத்தன் ஒரு கழுதையிலை வந்து ராசாவைக் கும்பிட்டு, 'ராசா ராசா இன்றைக்கு வேட்டைக்கு போறது அவ்வளவு நல்லதல்ல, மழைவரும் போல கிடக்கு' என்று சொல்ல, ராசா 'போடா பேயா' என்றுவிட்டுப் போனாராம்".

அழகையாவின் தலையை ஒருபுறம் தள்ளிவிட்டு அட நீயே, நான் கழுதைக்காரன் என்று நினைச்சன் என்று கூற இவன் அவருக்குத் தெரியாமல் பொறுபொறு என்று தலையாட்டினான்.

பின்னர், வேட்டைக்கு போனா ஒரேமழை! நல்லா நனைஞ்சு தோய்ஞ்சு வந்தாராம். ஈரஉடுப்பும் மாற்றாமல் உடனே அந்தக் கழுதைக்காரனை கூட்டிவா என்று அனுப்பி அவனை விசாரிச்சாராம். "எனக்குத் தெரியாதையா, கழுதைதான் அடையாளம் காட்டிச்சு" என்று சொல்ல, மந்திரியை கலைச்சுப் போட்டு, ராசா கழுதையை மந்திரி ஆக்...".

இவ்வேளை 'பொத்' என வாத்தியார் சறுக்கி விழுந்து வீதியின் நீர்ப்பரப்பில் ஒருகணம் தடுமாறி கையை ஊன்றி ஓடிவரத் தொடங்கினார். தலையிலிருந்து நீர் சிந்திப் பறந்தது. நீருக்குள் வேகமாக ஓடிவர முடியாமல் மீண்டும் மீண்டும் மூன்று தடவை விழுந்து எழும்பினார். ரைக்ரரை கொஞ்சம் வேண்டுமென்று நாங்களும் தள்ளி நிற்பாட்டினோம். இதற்குள் அழகன் இறங்கி முன்நின்ற ரைக்ரரில் ஏற அது பறந்தது.

"என்ன மாஸ்ரர்? தவறி விழுந்தியளே? ஏதாவது காயமே?" கேலியாசு விசாரிக்க.

உந்த மோட்டு... தள்ளி விழுத்திப் போட்டான் -நீங்களும் சேர்ந்துதான்" என சந்தேகமாக அவர் பார்க்க, 'சீச்சீ உங்களுக்கு செய்வமே, நீங்களும் எங்கட எஸ்.-ரி. எவ். தானே', என்றேன். நொண்டிய மாஸ்ரரை கைகொடுத்து வந்து ஏற்றினேன். எஸ்.-ரி. எவ். என்பது விசேட அதிரடிப்படை. அதில் ஏழு பேர் இருந்தோம். அதில் இந்தச் செயலுக்கு திட்டமிட்ட அனைவரும் எஸ். ரி. எவ். அல்ல. நானும் வர்மனும் றஞ்சனும் மட்டுமே.

எமது நடவடிக்கை மாஸ்ரருக்கு செய்தது போன்ற துணிகரத் தாக்குதல்களில் இருவரைக் கொழுவிவிடல், புதிதாக பட்டம் சூட்டுதல். இவை போன்ற அநேகமானவை. இத்தனை காலமும் பிரிந்து செயற்படாமல் இருந்த எம்முடைய இணைப்பின் முதல் தாக்குதல் இதுவாகும். இதில் சிலபேரை கருவியாகப் பயன்படுத்துவோம். பின்னர் அவர்கள் மோதுப்பட நாங்கள் விலகுவோம்; அதுதான் எமது ராஜதந்திரமும் அடிப்படைச் செயல்வடிவமுமாகும்.

(தொடரும்...)




சுமங்களா

நீண்ட தூரம்வரை காடு மண்டிக்கிடந்தது. விரல்விட்டு எண்ணக்கூடிய குடிமனைகள். அதன் ஓரமாக பாம்பு போல் வளைந்து நெளிந்து போகும் அந்த புழுதிபடர்ந்த வீதியோரத்தில், அந்த சிறிய கடை போராளிகளின் வரவை எதிர்பார்த்து அவர்களின் தாகம் தீர்ப்பதற்கு ஏங்கிக்கொண்டிருக்கும்.

அவர்களின் வரவைக் கண்டதும் அவளின் முகமலர்ச்சியைக் கூற முடியாது. அந்தக் கடைக்குள் சென்று ஓடி ஓடி தேநீர், அப்பம், பிட்டு... என்று அவள் நீட்டும் போது, அளவுக்கு மிஞ்சிய உபசரிப்பால் போராளிகள் செல்லமாகச் சினந்தாலும் "சாப்பிடுங்கோ... சாப்பிடுங்கோ..." என்று நச்சரித்துக் கொண்டிருப்பாள். சிலவேளைகளில், "வந்தால் நிம்மதியாகக் கதைக்கவும் விடுகிறியா?" என அதட்டலும் நடக்கும்.

இந்தச் சிறியவள்தான் எமது சுதந்திரவிடிவுக்காகத் தனது சிறுவயது முதல் அளப்பரிய வேலைகளைச் செய்துவந்தவள். இந்திய இராணுவத்தின் ஆதிக்க சுவடுகள் எமது சுதந்திர தேசத்தின் மூலை முடுக்கெல்லாம் பதிந்து இருந்த அந்த நேரத்தில்... சாதாரண மக்கள் தும்முவதற்கு இருமுவதற்குக்கூட பயந்த இரவுகளில், அந்தச் சிறிய கடைக்குள் எத்தனை இரவுகள் அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கு விழித்திருப்பாள்.

எத்தனை இரவுகள் "ஆமி அங்க நிக்கிது. ஆமி இங்க நிக்கிது. நீங்க வரவேண்டாம். உங்களுக்கு ஏதும் தேவையெண்டாச் சொல்லுங்கோ" என்று அவள் பாதங்கள் காட்டுக்குள் ஓடியிருக்கும்.

இப்படிச் செயற்பட்டவள் தானும் பயிற்சி எடுத்து களத்துக்குப் போகவேணும் ஆமியோட சண்டைபிடிக்க வேணும் என்ற நெடுநாள் ஆசையால்,

அப்போது பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்த 'சாம்' அண்ணையிடம் சென்று "அண்ணை என்னை றெயினிங்குக்கு அனுப்புங்கோ" என்று விடாப்பிடியாய் நின்றாள். "உனக்கு இங்கை நிறைய வேலையிருக்கு. இப்ப நீ போக ஏலாது" என்று அவர் கூறிவிட்டார். அவருக்கு இவளை அப்போது பயிற்சிக்கு அனுப்புவதில் விருப்பமில்லை. ஏனெனில் இவளின் உதவி அவருக்குத் தேவைப்பட்டது. அத்தோடு இவளுக்கு அங்கு நிறைய வேலைகளும் இருந்தன.

இவள், "சரி எனக்கா போக வழி தெரியாது. நான் போய்க் காட்டுறன்" என்று சவால் விட்டதுமல்லாமல் செயலிலும் காட்டினாள்.

அவர்களின் கடைக்கு வழமை போல அன்றும் அந்த அம்புலன்ஸ் வண்டி வந்தது. சாரதி வழமையாக அந்தக் கடையிற் சாப்பிடுபவன். அம்புலன்ஸ் அன்று வெறுமையாகத்தான் இருந்தது. சற்றுத்தூரம் சென்று, அம்புலன்ஸ் சாரதியிடம் "அண்ணை என்னை அந்தச் சந்தியிலை கொண்டுபோய் இறக்கி விடுறியளே" என்றாள்.

"தங்கச்சி இதிலை நோயாளியளை மட்டுந்தான் ஏத்தலாம்" என்று அவர் மறுத்துவிட, அவள் கெஞ்சிக்கூத்தாடி ஒருவாறு சம்மதிக்கச் செய்து ஏறிக்கொண்டாள். அந்தச் சின்னப்பறவை சுதந்திரத்தைத் தேடி வந்துவிட்டாள்.

அவளின் அன்றைய பயணம் பற்றித் தோழிகள் அடிக்கடி கேலி செய்வார்கள். "குவேனி அவசர சிகிச்சைக்குத்தானே அம்புலன்சில் வந்தாய்".

"சும்மா போங்கோடி" என தலையைச் சிலுப்பி சிரித்துக் கொள்வாள்.

குவேனி மன்னாரிலிருந்து முல்லைத்தீவு மகளிர் முகாமுக்கு வந்து சேர்ந்தாள். இவளுடன் இன்னும் இருபது பெண்பிள்ளைகள் வந்தனர், மறுநாள் குவேனியைவிட மற்றவர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். விம்மி விம்மி அழத்தொடங்கினாள். "என்ன ஆசையோடு நான் அங்கையிருந்து வந்தனான். என்னையும் பயிற்சிக்கு அனுப்புங்கோ". அவளது அழுகையை அடக்கப் பொறுப்பாளர் பட்டபாடு.

பயிற்சி பெறாமலே முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிது காலம் அரசியல் வேலையில் ஈடுபட்டாள். குறுகிய காலத்திற்குள்ளேயே மக்கள் இதயங்களில் நிறைந்துவிட்டாள்.

அவள் குறும்புப் பார்வை, விரிந்த தெளிவான கண்கள், அந்தத் தலை சிலுப்பல், உறுதியான தீவிர செயற்பாடுகள், அவள் மக்கள் மேல் செலுத்தும் அன்பு இவையாவும் அவள் மக்கள் உள்ளங்களில் இன்றும் அழியா இடத்தைப் பெறுவதற்குக் காரணங்களாக இருந்தன.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அவள், பயிற்சிக்காக அனுப்பப்பட்டாள். நானும் அவளும் ஒன்றாகவே பயிற்சி பெற்றோம். எந்நேரமும் என்பின்னால் "அக்காச்சி, அக்காச்சி" என குறும்புக் கதைகள் கூறிக் கொண்டே திரிவாள். பயிற்சியை திறம்படச் செய்தாள். மீண்டும் அரசியல் வேலைக்காகவே கூட்டிச் செல்லப்பட்டாள்.

"என்னக்காச்சி. பயிற்சி எடுத்திட்டு அடிபாட்டுக்கு போகலாம் எண்டு இருக்க, திரும்பவும் ஏத்திக்கொண்டு போயினம். எல்லாம் உங்களாலதான் நான் மறிக்கப்பட்டனான்" எனப் பகிடியாக என்னை ஏசினாள்.

இதன்பின் அவள் அரசியல் வகுப்புக்காக அனுப்பப்படுகிறாள். குவேனிக்கு முப்பது பேர் கொண்ட குழு கொடுக்கப்பட்டது. குழு நடத்துவதிலும் படிப்பதிலும் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்தினாள். வாராவாரம் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாகவும் தலைமை தாங்கியும் நிற்பாள். எத்தனையோ தடவை இவளின் செயற்பாடுகளைக் கண்டு நான் பிரமித்ததுண்டு.

பயிற்சி முடிந்து போராளிகள் மாவட்டம் மாவட்டமாக வேலைகளுக்கு அனுப்பப்பட்ட போது இவளுக்கு மகளிர் முன்னணியின் நிதிப்பொறுப்பு வேலை ஒப்படைக்கப்பட்டது. எதிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பாள். அடிக்கடி பிள்ளைகள் காசு கேட்கும்போது "இயக்கம்படும் கஸ்டம் எனக்குத்தான் தெரியும். இயக்கம் என்ன தண்ணியிலேயோ ஓடுது" என்று பகிடியாக உண்மை நிலையைக் கூறுவாள். இவள் இதைச் சொன்னதும் "உன்னிடம் காசு வாங்கிறதை விட நேரை றஞ்சித் அண்ணையிடம் வேண்டலாம் போல இருக்குது" என்று தோழிகள் கூறுவார்கள்.

இவளுக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஆர்வம். ஆர்வம் மட்டுமல்ல செயல் வடிவிலும் காட்ட வேண்டும் என்று நினைப்பவள். பகல் முழுவதும் நிறைய வேலைகள் செய்துவிட்டு இரவு நேரத்தில் சென்று வாகனம் ஓட்டுவதற்கு பழகி வந்தாள்.

"மில்லர் அண்ணைக்கு அடுத்த பெண் கரும்புலி நான்தான்" என்று அடிக்கடி கூறிக்கொள்வாள். சில நாட்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடாத்தப்பட்ட பொறியியல் வகுப்பிற்கு சென்று வந்தாள். சிறிது ஓய்வாக இருக்கும் வேளையில் புகைப்படக்கலை பற்றிக் கேட்டுப் படித்துக் கொண்டிருப்பாள். இவ்வாறு பல துறைகளிலும் இவளுக்கு ஆர்வம் இருந்தது.

இந்த வேளையில் இவளிடம் ஒரு பழுதடைந்த பண்ணையைத் திருத்தி அமைக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. முழுமூச்சாக நின்று குறுகிய காலத்தில் அந்தப் பண்ணையை வளமானதாக மாற்றினாள்.

இந்தப் பண்ணை வேலையின் போதுதான் ஒரு ஐயாவின் கதை மறக்க முடியாதது.

குடும்பம் மிகவும் கஸ்டப்பட்டது. நாள் வேலை செய்து அந்தக் கூலியைக் கொண்டுதான் வயிற்றுப்பசி போக்கும் குடும்பம் அது. தொடர்ந்து ஒரு மாதம் வரை வேலை செய்தார் அந்த ஐயா. அவர் செலவாளி. அரைப்பங்கு சம்பளத்தைத்தான் வீட்டிற்குக் கொடுப்பார்.

ஒரு நாள் குவேனி அந்த ஐயா வீட்டிற்குப் போய் வந்து தனக்குள்ளேயே ஏசிக்கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் ஐயாவும் வந்து சேர்ந்தார். "ஐயா இனி உங்களிடம் நான் பணம் தரமாட்டன். உங்கடை வீட்டிலைதான் கொண்டு போய்க் குடுப்பன். கொஞ்சமாவது யோசிக்கிறீங்களே ஐயா!" ஐயாவை ஏதோ ஒரு உரிமையுடன் ஏசிக்கொண்டிருந்தாள். மரத்துக்குக் கீழ் இருந்து ஐயா அழுதுவிட்டார். "எனக்குப் பிள்ளைபோல புத்தி கூறும் அளவிற்கு அப்பிள்ளையின் உணர்வைத்தான் நான் எண்ணிப் பார்க்கிறேன்", என ஐயா என்னிடம் அவள் ஏசிவிட்டுச் சென்றதும் சொன்னது என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அன்றிலிருந்து அந்த ஐயாவில் ஒரு புதிய மாற்றம். குவேனியிடம் அந்த ஐயா பெருமதிப்பும் அளப்பரிய அன்பும் வைத்திருந்தார். குவேனியும் அடிக்கடி அவர் வீட்டிற்கு சென்று வருவாள். இந்த ஐயாவின் உள்ளம் அன்று அவள் மரணம் கேட்டு பண்ணை வாசலில் கிடந்து "குவேனி! குவேனி!" எனக் கூக்குரல் இட்டது இன்னும் என் கண்களில். ஓ! அடுத்த வீட்டு அக்காவும் அவள் மரணம் கேட்டு இன்று குவேனி என்ற பெயரில் களத்தில்...

தொடர்ந்து ஆனையிறவுப் போர் ஆரம்பமானது. இதற்கான சகல ஏற்பாடுகளும் முன்கூட்டியே நடைபெற்றது. வேறு வேலைகளுக்கு நின்றவர்களும் விசேட பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். இந்தவேளையில் குவேனிக்கு களத்தில் இருந்து விழுப்புண் அடைந்த போராளிகளுக்கு உணவு வழங்குவதும் பராமரிப்பதும் தொடர்பான வேலைகள் கொடுக்கப்பட்டது. சண்டை உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவளால் அமைதியாக நின்று வேலை செய்யமுடியவில்லை.


கப்டன் குவேனி

"அக்கா நான் அடிபாட்டுக்குப் போகப் போறன் எவ்வளவு நாளைக்குத்தான் என்னைச் சோதிக்கப் போறியள்". என அழுதாள். இவள் உணர்வை இனியும் கட்டுப்படுத்த முடியாது என்ற பொறுப்பாளர் "குவேனி ஏறு வாகனத்தில் அடிபாட்டிற்கு போக" குரல் கேட்டதும்தான் அவள் முகம் எப்படி மலர்ந்தது.

இவள் போய் ஒரு குழுவுடன் நிற்கின்றாள். அக்குழு கொய்யாத்தோட்டத்தில் நின்றது. அங்கு மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் குவேனியைக் கண்டுவிட்டார். "இவள் ஏன் இங்கு வந்தாள்? குவேனி உனக்குத் தரப்பட்ட வேலையை செய்து விட்டாயா? சரி உடனே நீ திரும்பிப் போ" என்று அவர் கூறிவிட்டார். எப்படி இருக்கும்? அழுகையை அடக்கிக் கொண்டு மீண்டும் தனது வேலையைச் செய்தாள். அது மட்டுமா? தோழிகள் ஒவ்வொருவரும் கேலி செய்யத் தொடங்கிவிட்டனர். "கொய்யாத்தோட்டத்தைப் பார்த்தியா? இன்னொருத்தி, "எத்தனை ஆமியை விழுத்தினாய்" என்றதும் ஓடி ஒளித்திடுவாள்.

இதன் பின்னர் மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளராக இவள் அனுப்பப்பட்டாள். இச்சிறுவயதில் இப்பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டாலும் அதை திறமையாகச் செய்து வந்தாள். குறுகிய மாதங்களுக்குள் மாற்றம் ஏற்படுத்தித் திறமையாகச் செய்யவேண்டுமென்று துடித்தாள்.

அவள் ஓடித்திரிந்த அதே வீதி, அவள் எத்தனையோ இரவுகள் வைத்தகண் வாங்காமற் பார்த்திருந்த அதே வீதியில் மோட்டார் சைக்கிளிற் போய்க் கொண்டிருந்தாள். கடை முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்த தாய் அவளைக் கவனிக்கவில்லை. ஆனால் தம்பி குமணன் கண்டு விட்டு,

"அம்மா குமுதாக்கா போறா" என்று கூற, தாய் ஓடிப்போய் வீதியைப் பார்த்தாள். மறைந்து விட்டாள் குவேனி. போனவள் திரும்பி இதால வருவாள் தானே என அந்தத் தாய் உள்ளம் காத்திருந்தது. ஆனால் அவளோ வேறு பாதையால் முகாம் திரும்பி விட்டாள். பாசத்தைவிட அவளின் கடமையுணர்வினை அம்மா புரிந்து கொண்டாள்.

மன்னார் மாவட்டத்திற்கு மகளிர் படையணி அடிபாட்டுக்குச் சென்றது. அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அவள் தன் வேலைகளுக்கிடையில் செய்து வந்தாள். அங்கு செல்லும்போது அவர்கள் வைத்திருக்கும் புதிய ஆயுதங்களைக் கையாள்வது பற்றியும் அறிந்து வருவாள்.

அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த போது மகளிர் படைப் பொறுப்பாளரிடம், "அக்கா அங்கை அடிபாடு தொடங்கினால் நாங்களும் போகலாம் தானே" எனக் கேட்டாள். அவர் சம்மதமாகப் தலையாட்டியதும் அவள் அடைந்த சந்தோசம்.

"எங்கடை இடத்திலை அடிபாடு வந்தால் அடிபடச் சொல்லியாச்சு என்று குழந்தை போலத் துள்ளிக் குதித்ததை நினைத்த போது, எங்குதான் நின்றாலும் அடிபட வேணும் என்ற அவளது இலக்கினை அறிய முடிந்தது.

இந்த நேரத்தில் மகளிர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் மேஜர் பாரதி அங்கு வந்த போது, மகளிர் படையணியினரின் அடிபாட்டு இலக்குகளைச் சென்று பார்வையிடுவதற்கென இவர்கள் போய்க் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக எதிரியின் எல்லைக்குள் பிரவேசிக்க ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொள்கிறாள்.

குவேனி இன்று எம்முடன் இல்லை. ஜீரணிக்க முடியவில்லை. எல்லாப் போராளிகளின் வீரச்சாவுகளும் அப்படித்தான், எம்முடன் அவர்கள் வாழ்ந்துகொண்டிருப்பது போல...

அவளது முகாமில் தங்களது பிரச்சினைகளைக் கூறி அவளது அன்பு வார்த்தைகளாற் திருப்தியடைந்து செல்லும் அக்காமார், ஐயாமார், அவளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். எங்கடை குவேனி வரமாட்டாளா? இல்லை வருவார்கள், குவேனியைப் போன்ற ஆயிரமாயிரம் மாவீரர்களின் கனவுகளைச் சுமந்து புதிய குவேனியாக... ■

## உப்பு

வல்லை வெளியிலே
உப்பள்ளும் திருவிழா
கூட்டமோ கூட்டம்
ஒரு தேர்க் கூட்டம்
வெளியில் வழியில்
கொட்டுண்டு சிதறிக்கிடந்த
உப்பு முத்துக்களின்
பளீரிடும் வெண்மை
உப்புக் கிள்ளும்
சிறார்களின் பற்களோடு
போட்டியிட்டுத் தோற்கும்!
படிப்பும் மறந்து
பாட்டும் மறந்து
கண்களில் பசியுடன்
சோர்வும் மின்ன
நம்பிக்கையோடு
உப்புக்கிள்ளும்
சிறுவர்கள் ......!
இவர்கள் எதிர்காலம்
உப்புத் தானா?

■ தூயவள்

# சரியான பாதை

சிறு கதை

மலரன்னை

ஆடி மாதத்து வெயிலின் அகோர புழுக்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட அருணாசலத்தார் தலையில் போட்டிருந்த சால்வையைக் கையில் எடுத்து உதறியவாறே "அப்பப்பா! என்ன வெய்யில்! என்ன புழுக்கம்!" என்று அலுத்துக்கொண்டே வீட்டினுள் நுழைகிறார்.

நுழைந்தவர் அடுப்படிப் பக்கமாகத் திரும்பி, "இஞ்சாரும்! செல்லம்!" என்று கூப்பிடுகிறார். அங்கிருந்து பதிலொன்றும் வராததால் அறைக்குள் எட்டிப் பார்க்கிறார். அங்கே அவரது மனைவி செல்லம் வெறும் நிலத்தில் ஒருக்களித்தவாறு படுத்திருக்கிறாள். கிட்டப்போனவர், "இஞ்சாரும், நான் சாத்திரியிட்ட எல்லே போட்டு வாறன்" என்று சொன்னதுதான் தாமதம், மின் பாய்ச்சியதுபோல் செல்லம்மா எழுந்து உட்கார்ந்தாள்.

"என்னப்பா சொன்னது சாத்திரி? கண்ணன் எங்கே இருக்கிறானாம்?"

"சாத்திரி என்ன தேடிப்போய்க் கொண்டு வாறதே? உயிருக்குப் பிழை இல்லையாம். ஆனால் எங்கேயோ தலைமறைவாய் இருக்கிதாம். "

"அப்படியெண்டால் கண்ணன் ஆமியிட்டதான் அம்பிட்டிட்டானாக்கும். அவங்கள் பிள்ளையை அடிச்சாங்களோ! நொருக்கினாங்களோ? என்ரை பிள்ளை என்ன பாடுபடுகிதோ?" சொல்லியவளின் கண்கள் நீரைச் சொரிந்தன.

"நானெல்லே உமக்குச் சொன்னனான் சும்மா அழுது கொண்டிராதையும் எண்டு. சும்மா அழுகிறதை விட்டுட்டு கடவுளைக் கும்பிடும். அதுக்கு மேலை நாங்கள் என்னத்தைத்தான் செய்யிறது. . . . அது சரி இப்ப பிள்ளையள் பள்ளியால வரப் போதுகள். சமைச்சுப் போட்டீரே?"

"இல்லையப்பா! எனக்கெண்டால் சமைக்க மனம் ஏவுதில்லை" என்று செல்லம்மா கூறவே, அருணாசலத்தாருக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

"நீர் சும்மா அவனை நினைச்சு அழுதுகொண்டிருந்தால் மற்றப் பிள்ளையளை என்ன செய்யிறது? அதுகள் இப்ப பள்ளியால வந்து என்னத்தைச் சாப்பிடுறது? அப்படியெண்டால் ஒண்டு செய்யவமே? பிள்ளையளையும் தூக்கிக் கிணத்துக்கை போட்டுட்டு நாங்களும் குதிப்பம்"

அருணாசலத்தாருக்கு கோபம் எல்லை கடந்துவிட்டதை உணர்ந்த செல்லம்மா, அடுப்படியை நோக்கிப் போனாள். சமையலைத் தொடங்கினாள். சிந்தனை அலைகள் அவளை முந்திக்கொண்டு விட்டன.

மாவிட்டபுரத்தில் அமைதியாக வாழ்ந்த குடும்பம் அது. அவர்கள் வெற்றிலைத் தோட்டம், பெரிய வீடு, வளவு என்று வசதியாக வாழ்ந்து வந்தனர். இருந்தாற்போல் இராணுவம் முன்னேற, அப்படி அப்படியே வீடு வாசல், பொருட்கள், கால்நடை எல்லாவற்றையுமே விட்டுவிட்டு, உயிரை மட்டும் காப்பாற்றியவாறு அகதிகளாக ஓடி வந்துவிட்டனர். அவர்களின் பின்னால் அவர்கள் வளர்த்த நாய் மட்டும் ஓடி வந்து விட்டது. சில பெறுமதியான பொருட்கள், துணிமணிகள், நகைகள் என்று கொஞ்சத்தைக் கொண்டு வந்து மானிப்பாயில் உள்ள அவர்களது உறவினர்கள் ஒருவரின் வீட்டில் முன்னரே வைத்திருந்தனர். அதுதான் அவர்களுக்கு அந்த நேரத்தில் கைகொடுத்தது. அவர்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தனர்.

அவர்களது ஐந்து பிள்ளைகளில் மூத்தவன் கண்ணன், ஏ. எல். வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு பரீட்சை வேறு நெருங்கி விட்டது. அவனுக்குப் படிக்கப் புத்தகங்களோ, கொப்பிகளோ ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையும் தான் மாவிட்டபுரத்திலேயே விட்டு விட்டு வந்துவிட்டார்களே. பாவம்! அவன் செய்வதறியாது யோசித்தான்.

அவனது நண்பன் ஒருவனது வீடு அளவெட்டியில் இருந்தது. அவனுடனாவது சேர்ந்து படிக்கலாமென்றால் மானிப்பாயில் இருந்து அளவெட்டிக்குப் போய்வருவது மிகவும் சிரமமாக இருந்தது. அருணாசலத்தார் யோசித்தார். ஐந்து பிள்ளைகளுடன் இன்னொருவர் வீட்டில் தங்குவதும் அவருக்கு நல்லதாகப் படவில்லை. எனவே அளவெட்டியில் ஒரு சிறிய வீடு வாடகைக்கு எடுத்து அங்கு குடிபோனார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் அருணாசலத்தாருக்கு தொழில் எதுவும் இன்றிச் சும்மா இருப்பதும் பிடிக்கவில்லை. அவர்கள் குடியிருந்த வீட்டுக்கு அண்மையில் ஒரு தோட்டக் காணியைக் குத்தகைக்கு எடுத்தார். அதில் மரக்கறிப் பயிர் வகைகள் செய்ய ஆரம்பித்தார். கண்ணனுக்கும் தனது நண்பனிடம் புத்தகங்கள் கொப்பிகள் மாறிப்படிப்பதற்கு வசதியாக அமைந்தது.

மாதங்கள் சில உருண்டன. ஏ. எல். பரீட்சை துவங்கிவிட்டது. கண்ணனுக்கு இரண்டு பாடங்களுக்கான பரீட்சை நடந்து முடிந்திருந்தது. கண்ணன் இரண்டு பாடங்களுக்கான பரீட்சைகளை நன்றாக எழுதியிருந்தான். மற்றைய பாடங்களைத் தயார் செய்வதில் மூழ்கியிருந்தான்.

திடீரென்று ஒரு நாள் ஊரில் கதை பரவலாயிற்று. ஆமி தகர வேலியைக் கழட்டி விட்டானாம். வெளிக்கிடப் போகிறான் என்று பலமாதிரிக் கதைத்தார்கள். கண்ணன் படிப்போடு ஒன்றிப்போயிருந்ததால் அவனுக்கு வெளி நடப்புத் தெரியவில்லை. அருணாசலத்தார் தோட்டத்தோடு பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தார். அவருக்கும் இந்தச் செய்திகள் ஒன்றும் காதில் விழவில்லை.

அன்று கண்ணனுக்கு பரீட்சை இருந்தது. அதிகாலை மூன்று மணிக்கு எழும்பிப் படித்துக்கொண்டிருந்தான். இருந்தாற்போல் குண்டுச் சத்தங்கள் கேட்கத் துவங்கின. செல்கள் தலைக்கு மேலாக கூவியவண்ணம் அண்மையில் வந்து விழத் துவங்கின. பொம்மர் ஒன்று வானில் வட்டமிட்டுக் குண்டுகளை வீசித் தள்ளியது. போதாதற்கு கெலி ஒன்று வட்டமிட்டபடி 'றொக்கட்' தாக்குதலை மேற்கொண்டது. அருணாசலம் குடும்பத்தினருக்கு அப்போது தான் நிலைமை விளங்கியது. பீதியடைந்த எல்லோரும் அவசரமாக வெளியேறத் தொடங்கினார்கள். வெடிச்சத்தங்களுக்கு மத்தியில் அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். எங்கும் சனவெள்ளம். அதற்குள் துப்பாக்கிச் சன்னங்களும் காற்றை ஊடறுத்து வந்தபடி இருந்தன. அருணாசலத்தாரும் மற்றவர்களும் முன்னே போய்க்கொண்டிருக்க, கண்ணனும் அவர்களது நாயும் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.

எல்லோரும் வந்து சண்டிலிப்பாயில் ஒரு பள்ளிக்கூடத்தில் தரித்தனர். மிகவும் களைத்துச் சோர்ந்து போயிருந்த அவர்கள் அப்போதுதான் கவனித்தார்கள், கண்ணனைக் காணவில்லை. சனக்கூட்டத்தில் எங்கெல்லாமோ அவனைத் தேடினர். இன்றுவரை தேடுகின்றனர்.

பலரும் பலமாதிரியும் கதைத்தனர். சிலரை ஆமி பிடித்துவிட்டதாக ஒரு கதை. 'சிலரைச் சுட்டுப் போட்டாங்களாம்' என்றும் இன்னொரு கதை. சிலர் பொம்மர் அடித்தும், சிலர் செல் பட்டும் இறந்து விட்டதாக கதைத்தார்கள். எதிலுமே கண்ணனைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. அருணாசலத்தாரும் அலையாத இடமில்லை. எதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

* * * * * *

ஒரு நாள் அருணாசலத்தார் அவசரமாக ஓடி வந்தார். "இஞ்சாரும் செல்லம்! உங்க ஆமியிட்டைப் பிடிபட்ட ஆக்களில கொஞ்சப் பேரை விட்டிருக்கிறாங்களாம். எங்கட வீரசிங்கமும் பிடிபட்டிருந்து விடுபட்டிருக்கிறானாம். அவன் இப்ப இணுவிலிலை இருக்கிறானாம். நான் ஒருக்கால் போய் விசாரித்துக் கொண்டு வரப்போறன்" சொல்லியவர் உடனே புறப்பட்டும் விட்டார்.

இப்போதுதான் ஓரளவு சுயநிலைக்கு வந்திருந்த செல்லம்மாவிற்கு, மீண்டும் பழைய நினைவுகளும், கவலையும் தலைகாட்டத் துவங்கியது. இடையிடையே மூத்த மகனின் நினைவு வந்து அலைக்களித்தாலும், சிறு, தென்பாய் இருந்து மற்றப் பிள்ளைகளைக் கவனித்து வந்தவளுக்கு, இந்தச் செய்தியைக் கேட்டதும் மகன் சுகமே இருப்பதாக செய்தி கிட்டாதோ என்ற நப்பாசையும் மனதில் துளிர் விட்டது. அருணாசலத்தாரின் வரவை ஆவலோடு பார்த்திருந்தாள்.

* * *

இணுவில் கந்தசுவாமி கோவிலடியில் சிறுவர் கூட்டமாக நின்று பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அருணாசலத்தார் அவர்களிடம் விசாரித்தார். "தம்பியவை இங்கினேக்கை வீரசிங்கம் எண்ட மாவிட்டபுரத்துப் பெடியன் இருக்கிறானாம். ஆமி பிடிச்சு வச்சிருந்து கிட்டடியிலதான் விடுபட்டு வந்தவன். உங்களுக்குத் தெரியுமே அவன் இருக்கிற வீடு?"

சிறிது உயரமாக வளர்ந்திருந்த பையன் ஒருவன் மற்றொருவனிடம், "டேய்! மயில்வாகனத்தாரின்ர வீட்டை ஒருக்கா இந்த ஐயாவுக்குக் காட்டி விடடா" என்று உத்தரவிட்டவன் இவரைப் பார்த்து " ஐயா! இவனோட போங்கோ. வீட்டைக் காட்டிவிடுவான். அந்த வீட்டிலதான் நீங்கள் தேடின வீரசிங்கம் எண்டவரும் இருக்கிறார்" என்று கூறினான். 'நல்ல குணமான பெடியனாகக் கிடக்கு' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டே அந்தச் சிறுவனுடன் போனார் அருணாசலத்தார்.

இவ்வளவு சுலபமாக வீரசிங்கம் இருக்கும் வீட்டைக் கண்டு பிடித்து விடலாம் என்று அவர் எள்ளளவும் எண்ணியிருக்கவில்லை. படலையைத் திறந்தவர் அதிசயித்துப் போனார். ஏதோ கதாப் பிரசங்கம் நடக்கும் இடம்போல் சனக்கூட்டம் அங்கு நிரம்பியிருந்தது. எல்லோரும் புதினங்களை அறிந்து கொள்ள வந்திருந்தார்கள். அத்தனை பேரின் மத்தியிலும் இவரைக் கண்டவுடன் வீரசிங்கம் எழுந்து வந்து, "பெரியப்பு வாங்கோ" என்று உபசரித்தான். கண்ணனைப் பற்றி அவனே விசாரிக்கத் தொடங்கிவிட்டான். அருணாசலத்தாரும் அவனை விடவில்லை. துருவித் துருவி விசாரித்தார். கண்ணனைக் கண்டதாகத் தகவலே இல்லை. இறுதியில் வீரசிங்கம் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.

" பெரியப்பு ஆமி முன்னேறி வந்த அண்டைக்கு, மூண்டு பேரைச் சுட்டுப் போட்டுக் கொளுத்திப் போட்டாங்கள் எண்டு கேள்வி. ஒரு வேளை அதில ஒண்டாய் இருக்குமோ?"

அருணாசலத்தாருக்கு மண்டைக்குள் எரியுமாப்போல் ஓர் உணர்வு. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டார். அவர்கள் தந்த கோப்பியைக் குடித்தபின் சிறிது தெம்பு வரவே வீட்டிற்குப் புறப்பட்டார்.

பொழுது சாயும் நேரத்தில், களைத்து விழுந்து வந்த அருணாசலத்தார் ஒன்றுமே பேசவில்லை. 'தொப்' என்று நிலத்தில் இருந்துவிட்டார். செல்லம்மா பயத்துடன் நெஞ்சு படபடக்க அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற அச்ச மேலீட்டால் ஓர் ஓரமாக ஒதுங்கி நின்று அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், "எல்லாம் வீண். அவன் தம்பியையே அங்கை காணயில்லை எண்டு சொல்லுறானப்பா! ம். . . . !" என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். "எல்லாம் நாங்கள் செய்த பலன்" அவரது வாய் முணுமுணுத்தது.

* * *

செல்லம்மா இப்போது முற்றாக மாறிவிட்டாள். தனது பிள்ளைகளின் நலன்களைக் கவனிப்பதில் அக்கறை செலுத்தினாள். அவளது வாழ்க்கை

தொடர்ச்சி 13ம் பக்கம். . . .







# பூநகரி நாயகர் நினைவாக

# ஒரு பாடல்

மழைமேகம் துளியாகிப் பொழிகின்ற காலம்
பகைவீடு துயில்கின்ற விடிசாம நேரம்
புலியாகிப் புயலாக புறப்பட்டுச் சென்றீர்
பூநகரில் நிலையான பகையாவும் வென்றீர்.

வெற்றி பெற்றுத் தந்துவிட்டு நீருறங்கு கின்றீர்
விடுதலைக்கு முடிதரித்து விட்டுறங்கு கின்றீர்
பெற்றளித்த ஆயுதங்கள் போல்முழங்கு கின்றீர்
பூநகரி நாயகராய் நீர்விளங்கு கின்றீர்.

வந்தபடைத் தளத்தினுக்கு தீயைமூட்டினீர் - பகை
வாசலிலே நீர்புகுந்து பேயை ஓட்டினீர்
விந்தையிது என்றுலகம் வியந்துரைத்தது - உங்கள்
வீரமதைக் கண்டுபகை பயந்தொழித்தது.

நாகதேவன் துறையினிலே காற்றாகினீர் - அந்த
ஞானிமடத் தளத்தினுக்குக் கூற்றாகினீர்
வேவுபடை வீரரென நீங்கள் புகுந்தீர் - பெற்ற
வெற்றிகளின் வேர்களிலே நீங்கள் விழுந்தீர்.

நெஞ்சினிலே உங்களுக்கோர் கோயில் அமைத்தோம்
- கண்ணில்
நீர்வழிய நின்றுமக்கு மாலை தொடுத்தோம்
பஞ்சுநெருப் பாகிவரும் பகையை முடிப்போம் - பிர
பாகரனின் காலத்திலே ஈழம் எடுப்போம்.

– புதுவை இரத்தினதுரை


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden